Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM — மக்கள் நாளிதழ்

பக்கங்கள் ~ 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஆனி -23 | 08-07-2003 | செவ்வாய்க்கிழமை | ஓசை 140




# யாழ். மாவட்ட அபிவிருத்திப் பணிகளுக்கு உயர் பாதுகாப்பு வலயங்களே இடையூறு

## தென்கிழக்காசிய நாடுகளுக்கான அமெ. உதவிச் செயலரிடம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் பத்மநாதன் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

**யாழ். குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயங்களால் மக்கள் தமது இயல்பு நிலை பாதிக்கப்பட்ட நிலையில் பெரிதும் கஷ்டப் படுகின்றனர் என்றும், அப்பகுதிகளில் இருந்து இராணுவம் நீங்கினாலேயே அபிவிருத்திப் பணிகளைத் திறம்படச் செயற்படுத்த முடியும் எனவும் யாழ். அரச அதிபர் பத்மநாதன் தம்மைச் சந்தித்த தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்கான உதவிச் செயலாளர் றொனால்டேவிடம் தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் ஏ-9 வீதியூடாக யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த உதவிச் செயலாளர் நேற்றுக் காலை யாழ். அரச அதிபருடன் கலந்துரையாடியபோதே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நேற்று இரண்டு மணி நேரம் நடைபெற்ற கலந்துரையாடலில் யாழ். குடாநாட்டின் தற்போதைய அரசியல் சமூக கலாச்சார நிகழ்வுகள் உட்பட அபிவிருத்தி தொடர்பான விடயங்களும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. யாழ். குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயங்களால் மக்கள் தமது இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்ட நிலையில் மிகவும்

(08ஆம் பக்கம் பார்க்க)

# வதிரியில் இராணுவம், பொலிஸ் கடும் வீதிச் சோதனை

வடமராட்சியில் இராணுவமும் பொலிசாரும் இணைந்து நேற்று மிகவும் கடுமையான வீதிச் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

விடுதலைப்புலிகளின் அரசியல் அலுவலகம் அமைந்துள்ள வதிரிச் சந்திப் பகுதியில் இராணுவத்தினரும், பொலிசாரும் பெருமளவு குவிக்கப்பட்டனர். இந்தப் படையினரும் பொலிசாரும் பொதுமக்கள் மற்றும் வாகனங்களைக் கடுமையாகச் சோதனையிட்டனர்.

படையினர் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட பொலிசார் ஆவணங்களையும், பொது மக்களையும் சோதனையிடும் நடவடிக்கையில்

(08ஆம் பக்கம் பார்க்க)

# திருமலை நகரில் தேடுதல்; ஐந்து பேர் கைதாகி தடுத்துவைப்பு

திருமலைநகரப் பகுதியில் பொலிசாரும் இராணுவத்தினரும் நேற்று தேடுதல் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டு ஐந்து பேரைக் கைது செய்துள்ளனர்.

காலை திருமலை நகரின் மடத்தடிச் சந்தி, விகாரை ஒழுங்கை உட்பட அதனையண்டிய பகுதிகளில் பொலிசாரும் இராணுவத்தினரும் இணைந்து இத் தேடுதலை நடத்தினர்.

வீடுவீடாகச் சென்று பிரதான குடியிருப்பாளர் விபரம், அங்கு வசிப்

(08ஆம் பக்கம் பார்க்க)

# 40 மில்லியன் நிதி மோசடி தொடர்பாக யாழ். முன்னாள் அரச அதிபருக்கு எதிராக வழக்கு

கடந்த 2000ம் ஆண்டு முதல் 2002 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிகளில் ரான் எனப்படும் வடக்குப் புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபைக்கு யாழ்.மாவட்டத்தில் கட்டடப் புனரமைப்புக்கு என ஒதுக்கப்பட்ட 40 மில்லியன் ரூபா நிதி மோசடி தொடர்பாக முன்னாள் யாழ்.அரச அதிபர் சண்முகநாதனுக்கு எதிரான நிதி மோசடி தொடர்பாக கொழும்புக் குற்றப் புலனாய்வுப் பொலிஸ் பொறுப்பதிகாரி பலப்பிட்டிய வழக்கொன்றினை யாழ். நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்.

மேற்படி ரான் அமைப்பினால் 14 கட்டடங்களை அமைக்கவென ஒதுக்கப்பட்ட 40 மில்லியன் ரூபா நிதியில் மோசடிகளை மேற்கொண்டிருந்ததாக அகதிகள் புனர்வாழ்வு மீள் குடியரசு அமைச்சின் செயலாளர் அ.ஜெயரத்தினத்தினால் கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு முறைப்பாடு ஒன்று கடந்த 03.06.2003 அன்று செய்யப்பட்டது.

(08ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பு கண்காணிப்புக்குழு அலுவலகத்திற்கு பொலிஸ் பாதுகாப்பு

மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்திற்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. கடந்த சில தினங்களுக்கு முன் சுட்டுக் கொல்லப்பட்ட புளொட் குழு உறுப்பினரின் சடலத்தை கண்காணிப்புக்குழு அலுவலகத்திற்கு முன் வைத்து தமிழ்க்குழு உறுப்பினர்கள் மறியல் போராட்டம் நடத்தியதையடுத்தே இவ்வாறு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

# கேணல் பதுமன் -ரெலவ்சன் சம்பூர் அலுவலகத்தில் சந்திப்பு

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரெலவ்சனுக்கும் விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்டத் தளபதி கேணல் பதுமனுக்கும் இடையே நேற்று ஒரு மணி நேரச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான சம்பூரிலுள்ள விடுதலைப் புலிகளின் அலுவலகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது கடல் வழிப் பயணம், குரங்குப்பாஞ்சானில் உள்ள

(08ஆம் பக்கம் பார்க்க)

# ஒத்திவைப்பு

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவரின் வன்னி வருகை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கண்காணிப்புக் குழு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இன்று வருகை தரவிருந்த கண்காணிப்புக் குழுத்தலைவர் தனது விஜயத்தை ஒத்திவைத்துள்ளதாகவும், அவர் எப்பொழுது வன்னிக்குச் செல்வாரென முடிவு செய்யப்படவில்லை எனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

# மகனைக் கொலை செய்தவர் ஆஸ்பத்திரியில் வைத்துக் கைது

தென்மராட்சியின் மீசாலைப் பகுதியில் மகன் ஒருவரைக் குத்திக் கொலை செய்ததன் பெயரில் அந்த இளைஞனின் தந்தையாரான எஸ். லோகேந்திரன் நேற்று அதிகாலை யாழ். மந்திகை அரசினர் வைத்தியசாலையில் வைத்து பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை மூன்று மணியளவில் தலையில் ஏற்பட்ட அடிகாயம் ஒன்றுக்கு மருந்து கட்ட மந்

(08ஆம் பக்கம் பார்க்க)

## அபிவிருத்தி லொத்தர் சபை

# பணிப்பாளர் சபை அங்கத்தவராக கரீம் பீரிஸ் சனாதிபதியால் நியமனம்

அபிவிருத்தி லொத்தர் சபையின் பணிப்பாளர் சபை அங்கத்தவராக கரீம் பீரிசை சனாதிபதி செயலகம் நியமித்துள்ளது.

சனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் பதவியுடன் அபிவிருத்தி லொத்தர்சபை பணிப்பாளர் சபையில் உத்தியோகபூர்வ அங்கத்தவராகவும் கரீம் பீரிஸ் கடமையாற்றுவார் என சனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்

(08ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலையை புனரமைக்கக்கோரி

# அபிவிருத்திச் சங்கத்தலைவர் சாகும்வரை உண்ணாவிரதம்

(அலுவலக செய்தியாளர்)

மிகவும் மோசமாக சேதமடைந்திருக்கும் ஊற்றுப்புலம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையை புனரமைத்துத்தருமாறு கோரி ஊற்றுப்புலம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் நா. சின்னையா என்ற முதியவர் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்றுக் காலை 10.00 மணிக்கு, பாடசாலையின் முன்பாக அமைக்கப்பட்ட பந்தலில் ஆரம்பித்துள்ளார்.

மிகவும் மோசமாக சேதமடைந்திருக்கும் மேற்படி பாடசாலையின்

(08ஆம் பக்கம் பார்க்க)




(ஊற்றுப்புலம் பாடசாலை)

# தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்குச் செல்லும் பெற்றோர் மீது இராணுவம் கெடுபிடி

தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்குச் செல்லும் பெற்றோர், பாதுகாவலர்கள் மீது இராணுவத்தினர் மிகுந்த கெடுபிடிகளை மேற்கொள்கின்றனர். இப்பாடசாலை காங்கேசன்துறை இராணுவ முகாமை உள்ளடக்கிய உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள நிலையில் தற்பொழுது இயங்கி வருகிறது. தமது பிள்ளைகளின் நலன் கருதி கூடச் செல்லும் பெற்றோரும், பாதுகாவலர்களும் இராணுவத்தினரால் மிகவும் சோதனைக் கெடுபிடிகளுக்குள்ளாக்கப்படு கின்றார்கள். இது இவ்வாறு இருக்க அந்தப்

(08ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுக்கு எதிராக செயற்படுத்த வேண்டிய திட்டங்கள் தேசவிரோதக் குழுக்கள் தயாரிப்பு

## சந்திரிகா, ரணிலிடம் சமர்ப்பிக்கத் திட்டம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கு எதிராக செயற்படுத்த வேண்டிய புதிய செயற்றிட்டம் ஒன்று தேசவிரோதத் தமிழ்க்குழுக்களால் தயாரிக்கப்பட்டு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடமும், பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவிடமும் கையளிக்கப்பட விருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

ஈழமக்கள் சனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி), ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (வரதர் அணி) உள்ளிட்ட சில தமிழ்க்குழுக்கள் இணைந்து இந்தச் செயற்றிட்டத் தைத் தயாரித்துள்ளதாக தெரிய வருகிறது.

இந்தச் செயற்றிட்டத்தை நடை முறைப்படுத்துவதன் மூலம் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் அண்மைக்கா லமாக இடம் பெற்றுவரும் கொலை களை நிறுத்தமுடியும் என்றும் மேற்படி குழுக்கள் சனாதிபதியிட மும் பிரதமரிடமும் கேட்டுக்கொண் டுள்ளன.

- கிளிவெட்டி - தங்கநகரில் -

## உணவில் தூக்கமாத்திரையைக் கலந்து வீட்டிலிருந்த பொருட்கள் கொள்ளை

உணவில் தூக்க மாத்திரை களைக் கலந்து வீட்டாருக்கு கொடுத் துவிட்டு பொருட்களைக் கொள்ளை யடித்தார்கள் என்ற சந்தேகத்தின் பெயரில் சேருவில பொலிசார் இரண்டு நபர்களைக் கைது செய் தனர். மூதூர் பிரதேசத்தில் கிளி வெட்டி-தங்கநகரில் இத் துணிகரத் திருட்டு இடம்பெற்றதாக சேருவில பொலிசார் தெரிவித்தனர்.

உடைமைகளைப் பறிகொடுத்த வர் ஒரு பெண். வெளிநாடு ஒன்றில் வேலை செய்துவிட்டு ஊர் திரும்பி யிருந்தார். சந்தேகநபர்கள் இருவ ரும் அவ்வீட்டிற்கு அடிக்கடி சென்று வந்து நண்பர்களாகப் பழகிக் கொண்டனர். ஒருநாள்அவ்வீட்டார்நன்றாக உறங் கிக் கொண்டிருந்த பொழுது வீட்டில் உள்ள பொருட்கள் எல்லாம் திருடப் பட்டது. திருடப்பட்ட பொருட்களின் பெறுமதிசுமார்50000என்று மதிப்பிடப் பட்டது.

வீட்டாரின் உணவில் நித்திரைக் குளிசையைக் கலந்துவிட்டு திருடர் கள் திருடியுள்ளார்கள். சேருவில பொலிசார் சந்தேகத்தின் பெயரில் இருவரைக்கைது செய்துமூதூர் நீத வான் முன்னிலையில் முற்படுத்தி னார்கள்.பொருட்கள் திருடப்பட்ட தினத்தில்வீட்டில் எஞ்சியிருந்த உணவுப் பொருட்கள் இரசாயனப் பரிசோதனைக்கு அரசாங்க இரசாய னப்பரிசோதகர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## ஐ.தே.க. அங்கத்தவர்களுக்கான ஒழுக்காற்று நடவடிக்கை அறிக்கை

### - நிறைவேற்றுக்குழுவிடம் சமர்ப்பிப்பு

அங்கத்தவர்களுக்கான ஒழுக் காற்று நடவடிக்கைகள் பற்றிய அறிக்கை ஒன்றை ஐ.தே.கட்சி அதன் தேசிய நிறைவேற்றுக்குழு விடம் நேற்று கையளித்துள்ளது.

இந்த அறிக்கை தயாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட குழுவின் தலைவ ரான அமைச்சர் கரு ஜெயசூரிய இந்த அறிக்கையில் முக்கியமான ஒழுக்காற்று பிரேரணைகள் அடங்கி யுள்ளதாகவும் இவற்றை பாராளு மன்ற உறுப்பினர்கள் உள்ளூராட்சி அங்கத்தவர்கள் பின்பற்றி நடக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண் டுள்ளார்.கட்சியின் சட்டப் பிரமாணங் களை சமீபகாலத்தில் மீறிய அங் கத்த வர்களுக்கு எதிராக நடவ டிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் தெரி விக்கப்பட் டுள்ளது.

கட்சியின் அங்கத்தவர் மத்தியில் கட்டுப்பாடு சீர்குலைந்து வருவதை அடுத்து தலைமைப்பீடம் கவலை கொண்டுள்ளதாகவும் தவறிழைத்த சில அங்கத்தவர்களை கட்சியில் இருந்து இடை நிறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

- அரச சிற்றூழியர்களுக்கான -

## பதவியுயர்வுப் பரீட்சை பெறுபேறுகள் வெளிவந்தன

வடக்கு கிழக்கு மாகாண மற்றும் மத்திய அரசாங்க சேவையிலுள்ள சிற்றூழியர்களை எழுதுநர் சேவை-11 (ஆ) மற்றும் தட்டெழுத்தாளர் சேவை-11 (ஆ) ஆகியவற்றுக்குப் பதவியுயர்த்துவதற்காக நாடளாவிய ரீதியில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் கடந்த 2002 ஆகஸ்டில் நடத்தப்பட்ட மட்டுப் படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப் பட்டுள்ளன. சித்தியடைந்தவர்களின் விபரம் வடக்கு கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு பரீட்சைத் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாண சபையில் கடமையாற்றும் சிற்றூழி யர்களில் தமிழ் மொழி மூலம் 16 பேரும் ஆங்கில மொழியில் ஒருவரு மாக மொத்தம் 17 பேர் சித்தியடைந்துள்ளனர்.

## மாகாண மட்ட மெய்வல்லுநர் போட்டி முல்லை. மாவட்டப் பெறுபேறுகள்

வடக்கு-கிழக்கு மாகாண மெய் வல்லுநர் போட்டியில் முல்லை. மாவட்ட மாணவர்கள் எட்டுப் போட்டிகளில் முதலிடம் பெற்றுள் ளனர். கடந்த 4ஆம் திகதி நடை பெற்ற இப்போட்டிகளில்இம்மாவட்ட மாணவர்கள் பெற்ற பெறுபேறுகள் வருமாறு;

கே.யசிந்தா,விக்கினேஸ்வரா,100மீ தடை 15பெண் 2ஆம்இடம்: ஜீ.நிரோ ஜன், குமுழமுனை ம.வி 100மீ.தடை 15ஆண் 3ஆம்இடம்: வி.சுரேஸ், கொக்கிளாய் அ.த.க.பா, 200மீ தடை 15ஆண் 2ஆம்இடம், 400மீ தடை 15ஆண் 1ஆம்இடம், நீளம் 15ஆண் 3ஆம்இடம்: சஞ்சேஜன், புதுக்குடியிருப்பு ம.வி. உயரம் 17ஆண் 2ஆம் இடம்: ரி.திவாகர், குமுழமுனை ம.வி தட்டு 17ஆண் 2ஆம்இடம்,ஈட்டி17ஆண் 3ஆம்இடம்: எஸ்.சிவசத்தி, குமுழமுனை ம.வி, உயரம் 19பெண் 3ஆம்இடம்: கே.ஜெயராணி,கொக்கிளாய் அ.த.க.பா, தட்டு 19பெண் 3ஆம் இடம்: ரி.திமுனா.கொக்கிளாய் அ.த. க.பா, 400மீ 19பெண் 1ஆம்இடம்: சஜீபா,யோகபுரம்ம.வி 100மீ 15பெண் 1ஆம்இடம்:எம்.சுகன்ஜா, அம் பலவன் பொக்கனை அ.த.க.பா, தட்டு 21பெண் 2ஆம்இடம், குண்டு 21பெண் 2ஆம்இடம், ஈட்டி 21பெண் 1ஆம்இடம்: கே.கோகிலரூபன், வற்றாப்பளை ம.வி 5000மீ 19ஆண் 01ஆம்இடம், 1500மீ 19ஆண் 1ஆம் இடம், 800மீ 19ஆண் 1ஆம்இடம்: ரி.ராகவன், கலைமகள் வித்தி. உய ரம் 15ஆண் 1ஆம்இடம்: ரி.ராஜ ஜந்தினி, வித்தியானந்தா கல்லூரி உயரம் 21பெண் 2ஆம்இடம்: எம். மயூரன்,பாண்டியன்குளம் 1500மீ 19ஆண் 2ஆம்இடம்:

19 அகவை ஆண்கள் பிரிவில் மு/வற்றாப்பளை ம.வி மாணவன் செல்வன் கே.கோகிலரூபன் 15 புள்ளிகளைப் பெற்று மாகாண மட்டத்தில் சிறந்த வெற்றி வீரராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். மாகாண நிலையில் முல்லைத்தீவு மாவட்டம் 65 புள்ளிகளைப் பெற்று 7வது நிலையைப்பெற்றுள்ளது. (26)


## பயணியர் பேருந்துப் புதிய பணி

மல்லாவி, பாலையடி, மாங்குளம், கனகராயன்குளம், புளியங்குளம் வழித்தடத்தில் மேற்படி பணி 10-07-2003 ஆம் நாளிலிருந்து பின்வரும் நேரஒழுங்கில் நடைபெறும் என்பதைப் பொதுமக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

நேர ஒழுங்கு:

மல்லாவி - புளியங்குளம்

| | மல்லாவி | பாலையடி | மாங்குளம் | புளியங்குளம் |
|---|---|---|---|---|
| பகல் | 12.00 | 12.30 | 01.30 | 02.15 |

புளியங்குளம் - மல்லாவி

| | புளியங்குளம் | மாங்குளம் | பாலையடி | மல்லாவி |
|---|---|---|---|---|
| மாலை | 04.00 | 04.45 | 05.45 | 06.15 |

முகாமையாளர்,
பயணியர் போக்குவரவு ஊர்தி,
வழியனுமதிப்பணியகம்.

(சி-8407)



## தமிழீழப் போக்குவரவுக் கழகப் பயணியர் பேருந்துப்பணி



துணுக்காய், மல்லாவி, பாலையடி, மாங்குளம் , கரிப்பட்டமுறிப்பு, ஒட்டுசுட்டான், கூளாமுறிப்பு, முள்ளியவளை,சிலாவத்தை, முல்லைத்தீவு வழித்தடத்தில் 10.07.2003ஆம் நாளில் இருந்து மேற்படி பணி பின்வரும் நேர ஒழுங்கில் நடைபெறும் என்பதனை பொதுமக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

நேர ஒழுங்கு:

துணுக்காய் - முல்லைத்தீவு

| துணுக்காய் | மல்லாவி | பாலையடி | மாங்குளம் | ஒட்டுசுட்டான் | முள்ளியவளை | முல்லைத்தீவு |
|---|---|---|---|---|---|---|
| காலை 06.00 | 6.20 | 06.45 | 07.45 | 09.30 | 10.30 | 11.00 |

முல்லைத்தீவு - துணுக்காய்

| முல்லைத்தீவு | முள்ளியவளை | ஒட்டுசுட்டான் | மாங்குளம் | பாலையடி | மல்லாவி | துணுக்காய் |
|---|---|---|---|---|---|---|
| பகல் 2.00 | 2.30 | 03.30 | 05.15 | 06.15 | 06.40 | 7.00 |

முகாமையாளர்,
தமிழீழப் போக்குவரவுக்கழகம்,
முல்லைத்தீவு.

(சி-8406)

# பாக்தாத்தில் அமெரிக்கப் படை திண்டாட்டம்; இருவேறு தாக்குதல்களில் நேற்று மூவர் பலி!

**ஈராக் தலைநகர் பாக்தாத்தில் நேற்று அமெரிக்கப் படையினர் மீது இரு வேறு தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. இதன் போது மூன்று படையினர் கொல்லப்பட்டதாக ஈராக்கிற்கான அமெரிக்க இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.**

இந்தத் தாக்குதல்கள் நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளது. மேலும் இருபத்தைந்து நிமிடங்கள் இடைவெளியில் தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன.

பாக்தாத் பல்கலைக்கழகம் அருகே குளிர்பானம் வாங்குவதற்காகக் காத்திருந்த வேளையில் ஆயுததாரிகளால் அமெரிக்கப்படை வீரர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இரண்டாவது தாக்குதல் நகரில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த வேளையில் மேற்கொள்ளப்பட்டது. இதில் இரு அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டனர். வாகன தொடரணியாக ரோந்தில் ஈடுபட்டிருந்த படையினர் மீது கைக்குண்டு வீசப்பட்டபோதே இந்த உயிரிழப்பு சம்பவித்துள்ளது.

இது இவ்வாறிருக்க நேற்று முன்தினமும் அமெரிக்கப் படையினர் தாக்கப்பட்டுள்ளனர். பாக்தாத்தில் நடைபெற்ற இம்மோதலில் அமெரிக்கப் படைவீரர் ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் இந்த மோதலில் இரு ஆயுததாரிகள் கொல்லப்பட்டதோடு மற்றும் ஒருவர் காயங்களுடன் கைதுசெய்யப்பட்டிருப்பதாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் அமெரிக்க, பிரிட்டிஷ் படையினர் தொடர்ச்சியாகத் தாக்கப்பட்டு வருகின்றனர். சதாம் ஆதரவாளர்களே இத்தகைய தாக்குதல்களை நடத்தி விட்டுத் தலைமறைவாகும் அதே வேளை படையினர் இத்தாக்குதல்களால் பெரும் மன உளைச்சலுக்கு உட்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ரயில்-ட்ரக் மோதல் 10 பேர் உயிரிழப்பு!

(ஹெய்ரோ)

எகிப்தில் சரக்கு ரயில் ஒன்றும ட்ரக் வண்டி ஒன்றும் ஒன்றுடன் ஒன்று மோதியதில் பத்துப்பேர் உயிரிழந்தும் ஐந்து பேர் காயமடைந்தும் உள்ளனர்.

ஹெய்ரோவில் இருந்து வட மேற்குப் பகுதியில் உள்ள நிவி டெல்ரா நகருக்குச் சென்று கொண்டிருக்கும் போதே மேற்படி விபத்து இடம்பெற்றுள்ளது.

## தலையொட்டிப் பிறந்தவரை பிரிக்க சத்திரசிகிச்சை!

### -2-வது நாளாகத் தொடர்ந்தது

29 ஆண்டுகளாக தலை ஒட்டிய நிலையில் வாழ்ந்து வரும் ஈரானைச் சேர்ந்த லாலேலாடன் சகோதரிகளைப் பிரிப்பதற்கான மருத்துவ சிகிச்சை நேற்று முன்தினம் சிங்கப்பூரில் தொடங்கியது.

நேற்று முன்தினம் நண்பகலில் முதல் கட்ட அறுவைச் சிகிச்சை நடைபெற்றுள்ளது.

இதன் பின்னர் நேற்று அதிகாலையில் இரண்டு சகோதரிகளின் மூளைக்கும் ரத்தத்தை எடுத்துச் செல்லும் முக்கிய இரத்தக் குழாயைப் பிரிப்பது சம்பந்தமான அறுவைச் சிகிச்சை நடைபெறுகின்றது. பத்திற்கும் மேற்பட்ட மருத்துவர்கள், மருத்துவ உதவியாளர்கள் இந்த அறுவைச் சிகிச்சையில் ஈடுபடுகின்றனர்.

அறுவைச் சிகிச்சைகள் முடிவதற்கு இன்னும் இரண்டு நாட்கள் ஆகும் என்று மருத்துவ செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார்.

இந்த அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளும் போது. உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்று மருத்துவர்கள் கூறியுள்ள நிலையில், எதற்கும் தயாராக இருக்கின்றோம் என்று ஈரானிய சகோதரிகள் அறிவித்தமையை அடுத்தே அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

மண்டையோடு ஒட்டி இருந்தாலும் இரு சகோதரிகளுக்கும் மூளை தனித்தனியாக உள்ளது. ஆனால் இருவரது மூளைக்கும் ஒரே ஒரு இரத்தக் குழாய் மூலம் ரத்தம் செல்கின்றது. இதனால் காதில் உள்ள இரத்தக் குழாயை எடுத்து ஒரு சகோதரியின் மூளைக்கு இரத்தம் கொண்டு செல்லும் குழாயாக மாற்றும் முக்கிய அறுவைச் சிகிச்சையே தற்போது நடைபெற்று வருகின்றது.

## பலஸ்தீனர்களை விடுவிப்பதில் புதிய நெருக்கடி; இஸ்ரேலினால் பல நிபந்தனைகள் விதிப்பு!

இஸ்ரேலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பலஸ்தீனக் கைதிகளை விடுவிப்பதற்கு இஸ்ரேல் இணங்கியுள்ள போதும் இஸ்ரேலைத் தாக்கத் திட்டமிட்ட கமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிகாத் அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்கள் விடுவிக்கப்படமாட்டார்கள் என இஸ்ரேல் அறிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்டுள்ள பலஸ்தீனர்களை விடுவிக்க இஸ்ரேல் இணங்கியுள்ளது. அமெரிக்காவின் தலைமையில் இடம்பெறும் சமாதான முயற்சிக்குக் கிடைத்த மற்றுமொரு வெற்றியாகக் கருதப்படுகிறது.

ஆயினும் கைதுசெய்யப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்வதற்குப் பல நிபந்தனைகளை இஸ்ரேல் விதித்துள்ளது.

இரத்தம் படிந்த கைகளோடு பலஸ்தீனக் கைதிகளை முழுமையாக விடுவிப்பதில் சிரமங்கள் இருப்பதாக இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன் தெரிவித்துள்ளார்.

அவர்களை விடுவிப்பதற்கு இஸ்ரேலியப் பிரதமர் விதித்த நிபந்தனைகள் அமைச்சரவையில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இஸ்ரேலிடம் உள்ள 6000 முதல் 8000 வரையிலான கைதிகளை விடுவிக்குமாறு பலஸ்தீனம் கேட்டுள்ளது.

இந்தக் கோரிக்கையை முழுமையாக ஏற்றுக்கொள்ளாத இஸ்ரேல் முன்வைத்திருக்கும் நிபந்தனைகள் திருப்திகரமானதாக இல்லை என்று பலஸ்தீன உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பலஸ்தீனம் எதிர்பார்த்த முக்கியமான கைதிகளை விடுவிக்கப்போவதில்லை என்பதை அடுத்தே பலஸ்தீனத்தின் அதிருப்தி வெளியாகியுள்ளது



பலஸ்தீனத்தின் காஸா நகரில் தீவிரவாத அமைப்பொன்றின் அங்கத்தவர் பயிற்சியின் போது றொக்கட் ஒன்றைச் செலுத்துகிறார்.

### -அரச ஊழியர் விடயத்தில்-

## தமிழக அரசின் போக்கிற்கு கண்டனம் தினகரனின் தீர்ப்பை நிறுத்த உத்தரவு!

(சென்னை)

கைது செய்யப்பட்ட அரச ஊழியர்களையும், ஆசிரியர்களையும் உடனடியாக விடுதலை செய்யுமாறு உயர் நீதிமன்ற நீதிபதி தினகரன் தமிழக அரசுக்கு உத்தரவிட்டுள்ளார்.

தமிழக அரச ஊழியர்கள் வேலைநிறுத்தப் பிரச்சினை தொடர்பாக அரச ஊழியர் சங்கம் தாக்கல் செய்த மனுவை விசாரித்த அவர், தமது தீர்ப்பை அறிவித்துள்ளார்.

அதில் கைது செய்யப்பட்ட ஊழியர்கள் அனைவரையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று உத்தரவிட்ட அவர் புதிதாக அரச ஊழியர்கள் நியமனத்துக்கும் தடை விதித்தார். மேலும் அரச ஊழியர்களினதும் ஆசிரியர்களினதும் பிரச்சினைக்குச் சட்டத்துக்கு உட்பட்டு தீர்வுகாண வேண்டும் என்றும் நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

வேலை நிறுத்தப் பிரச்சினையில் தமிழக அரசு உரிய முடிவு எடுக்கத் தவறிவிட்டதாக அவர் கண்டனம் தெரிவித்தார்.

இதேவேளை, வேலை நிறுத்தம் தொடர்பாகச் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி பி.டி. தினகரன் வெளியிட்ட உத்தரவுகளை உயர் நீதிமன்றத்தின் முதன்மை நீதிபதிகள் குழு நேற்று முன்தினம் இரவு நிறுத்தி வைத்துள்ளது.

நீதிபதியின் இந்த உத்தரவுகளை எதிர்த்து அரசு சார்பில் தலைமை நீதிபதியிடம் நேற்று முன்தினம் இரவு 9.மணியளவில் அவசர மேன்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவைத் தலைமை நீதிபதிகள் குழு நீதிபதி தினகரனின் உத்தரவுகளை நிறுத்தி வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு விசாரணையையும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.



ரியோடி ஜெனிரோவில் கொண்டாடப்பட்ட உம் உலகப் போர் நினைவு நாளன்று சட்டவிரோத ஆயுதங்களை அழிக்கும் கனரக உருளை.



வாக்களிக்க மறுக்கப்பட்ட சன்சல்வடோர் ஆர்ப்பாட்டக்காரர்களால் எரிக்கப்படும் பாதுகாப்பு வேலியூடாக வேகமாக மூவர் துவிச்சக்கர வண்டியில் பயணிக்கின்றனர்.

## டில்லி லாகூர் பேருந்து சேவை வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பம்

(புதுடில்லி)

புதுடில்லிக்கும் லாகூருக்கும் இடையிலான பேருந்து சேவை மீண்டும் வெள்ளிக்கிழமை முதல் நடைபெறவுள்ளது.

பேருந்து பயணத்திற்கான [illegible] முன் பதிவுகள் நேற்றுத் தொடங்கியுள்ளது.

இந்தியத் தரப்பில் டில்லி முதல் லாகூருக்கு வெள்ளிக்கிழமையிலும், பாகிஸ்தானிலிருந்தும் லாகூரிலிருந்தும் டில்லிக்குப் புதன், சனிக்கிழமைகளிலும் பேருந்துகள் [illegible] கூறப்படுகின்றது.

## சென்னை கடற்பரப்பில் இரு தினங்கள் அமெரிக்கா-இந்தியா கடல் ஒத்திகை

தமிழகத்தில் சென்னைக் கடற்பரப்பில் எதிர்வரும் பத்தாம் திகதி இந்திய, அமெரிக்க மற்றும் இந்து சமுத்திர பிராந்திய நாடுகள் சில பங்கேற்கும் பாரிய கடல் ஒத்திகை நடைபெறவுள்ளது.

10ஆம், 11ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டு ஒத்திகையில் கலந்து கொள்வதற்காக "ஜேரிட்ஸ்" எனும் அமெரிக்க யுத்தக் கப்பல் இன்று சென்னை வருகின்றது.

பன்னாட்டு தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கை தொடர்பான இந்த ஒத்திகையில் இந்தியாவின் போர்க் [illegible] "சகன்யா" மற்றும் கடலோரக் காவல்கலமான "[illegible]" என்பன பங்கு பற்றவுள்ளன. [illegible] கடற்படைத் தரப்பில் [illegible] கப்படுகிறது.

இந்த ஒத்திகையில் பார்வையாளர்களாகக் கலந்து கொள்ள சிறிலங்கா, மாலைதீவு, மடகஸ்கார் மற்றும் மொரீஷியஸ் கடற்படையினருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஒத்திகையில் இந்திய, அமெரிக்க கடற்படைகளின் விமானப் பிரிவும் கலந்து கொள்ளும் என்றும் கூறப்படுகின்றது.

# தூய தொழில்நுட்பம்

## சூழற் பாதுகாப்பின் அடிப்படையில் ஓர் புதிய அறிமுகம்

பொன்னையா ஆழ்வாப்பிள்ளை
சிரேஷ்ட விரிவுரையாளர் (தரம்-1)
விவசாய பீடம், யாழ்.பல்கலைக்கழகம்

தொழில்நுட்பம் என்ற பதத்திற்கு "புதிய முறை" என்ற கருத்தே விளக்கமாகக் கொள்ளப்படுகிறது. தொழில் நுட்பத்துடன் "தூய" என்ற பதம் இணைக்கப்பட்டுள்ளது. தூய தொழில் நுட்பம் என்பது குறைந்த சூழல் மாசுகளை **(Pouuranrs)** ஏற்படுத்தக் கூடிய வாறு அமையும். சிறந்த தூய தொழில்நுட்ப முறைகளாகும். தூய தொழில்நுட்பம் சூழல் காரணிகளுடன் இணைந்து சென்று கழிவு முகாமைத்துவத்தைச் **(Waote Management)** சீர் செய்வதனால் இக்கால கட்டத்தில் தூய தொழில்நுட்பம் மிக இன்றியமையாதது.

மனிதனின் தேவைகள் வளர்ந்து கொண்டு போக மூலவளங்களின் பாவனையும் அதிகரிக்கின்றது. அதாவது மனிதன் சொகுசான வாழ்க்கைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் இக்காலத்தில் வேலைப் பழுவற்ற சூழலை உருவாக்க விரைவான கைத்தொழில் மயமாக்கப்பட்ட நாடு அவசியம் தேவை. தேவைகள் நிறைவுறும் பட்சத்தில் வளர்ந்து வரும் கைத்தொழில் சூழலைப் பாதிக்கா வண்ணம் புதுவகையான "தூய தொழில்நுட்பம்" சூழல் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும்.

கந்தகவீரொக்சைட்டு, காபனோரொக்சைட்டு, ஓசோன், நைதரசன்ஒட்சைட்டுக்கள், காற்றில் தொங்கலான பதார்த்தங்கள் என்பன வாயு வடிவிலுள்ள மாசுக்களாகும். இவைகள் சேர்ந்த சூழல் தரக்குறைவை ஏற்படுத்துகின்றது. இதனைக் கட்டுப்படுத்த 1989இல் ரெளஸ்ரன் என்பவர் தூய தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்து வைத்தார்.

சூழலியலாளர்கள் தூய தொழில்நுட்பம் என்ற பதத்தை பல வடிவங்களில் பயன்படுகின்றனர்.

- வளங்களைச் சிக்கனப்படுத்தல்
- வளங்கள் மீளளிப்புச் செய்தல்
- வளங்களை விகித முறைப்படி உபயோகித்தல்
- கழிவைக் குறைத்தல்
- மாசுபடலைத் தடுத்தல்
- குறைந்த கழிவு தொழில்நுட்பம்
- கழிவற்ற தொழில்நுட்பம்

### தூய தொழில்நுட்ப தத்துவங்கள்

தத்துவங்கள் 3 படிகளில் அமைந்து மாசற்ற நிலைப்பாட்டைத் தோற்றுவிக்கிறது.

(1) தற்போதுள்ள உற்பத்தி முறைகளைத் தரமுயர்த்தல்

(2) உற்பத்தி முறைகளை நவீன மயமாக்கல்

(3) உற்பத்தி முறைகளை மாற்றி அமைத்தல்

உற்பத்தி முறைகளை நுணுக்கமாக அறிந்து அதன் வினைத்திறனான நிலையை அடைய முயற்சிக்கும் பொழுது கழிவுகள் கட்டுப்படுத்தப்பட்டு சீரான முறையை எல்லா உற்பத்தி நிறுவனங்களும் மேற்கொள்ளல் "தரமுயர்த்தல்" எனலாம். கழிவுகளை மீண்டும் பயன்படுத்தும் முறைகளைத் தேர்ந்தெடுத்து புதிய இயந்திர பகுதிகளை வடிவமைத்துக் கொடுத்தல் "நவீன மயப்படுத்தல்" எனலாம். நுண் மூலகங்களினது கழிவுகளைத் திரும்பப் பெறும் வண்ணம் அமைப்பு முறையினை மாற்றம் செய்தல் "மாற்றியமைத்தல்" எனப்படும். உள்ளீடு, மனித வளம், சக்தி என்பற்றைப் பயன்படுத்தி வெளியீடு உற்பத்தி செய்யும் பொழுது திண்ம-திரவ கழிவுகள் எமக்கு கிடைக்கின்றன கழிவுகளைப் பயனுள்ள பொருட்களாக மாற்றுவதனால் தூய தொழில் நுட்பம் வெற்றி பெறும் உதாரணமாக திக்கம் வடிசாலையில் தோன்றும் மெதையில் அற்ககோல் $CH_3OH$ பயனற்று போமல் டிகைட்டாக வளியை அடைவது சூழலுக்கு கேடு விளைவிப்பதோடு இலாப இழப்பு ஏற்படுவதும் தவிர்க்க முடியாததே.

### தூய தொழில்நுட்ப பயன்பாடுகள்

எமக்குத் தேவை பாதுகாப்பான சூழல் இதனை அடைய அடிப்படைத் தேவைகளான நீர்,வளி, உணவு, உறையுள் என்பன சீராக அமைவதுடன் சூழல் மாற்றங்களும் தவிர்க்கப்பட வேண்டும். இதன் பயன்களாவன.

01. சூழல் பாதுகாப்பு
02. சக்தி, மூலப்பொருட்களைச் சிக்கனப்படுத்தல்
03. வெளியீடுகளின் தரம் பேணப்படல்.
04. உற்பத்தி, இலாப அளவு அதிகரிப்பு
05. அழிவுச் செலவுகள் கட்டுப்படுத்தப்படும்
06. தரமான சூழல் பாதுகாப்பு

பல வகைப்பட்ட நன்மைகளை தூய தொழில் நுட்பம் வழங்குவதனால் அது பற்றிய அறிவை எமது மக்கள் பெற்றுக் கொள்ளல் அவசியமாகின்றது. இதற்கு இயந்திர சூழல், பரிசோதனைக் கல்வி கற்றல் என்ற இரண்டும் மக்களின் கவனத்துக்கு கொண்டு வரப்பட வேண்டும்.பின் சந்ததியினர் இயந்திர பாவனை களை அதிகமாக மேற்கொள்வது காணப் படினும் சமூகத்தில் பரிசோதனைக் கல்வி கற்றலில் பின்தங்கியே உள்ளனர்.

### சட்டவாக்கங்கள்

இலங்கையில் 1980ல் கொண்டுவரப்பட்ட பாதுகாப்புச் சட்டங்கள் மேலும் திருத்தப்பட்டு தூய தொழில் நுட்பத்தின் முக்கியத்துவம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. நெதர்லாந்தில் 1988இல் கொண்டு வரப்பட்ட "தேசிய சூழல் கொள்கைத்திட்டம்" தூய தொழில் நுட்பத்தின் முன்னோடியாக அமைந்துள்ளது. ஐக்கிய அமெரிக்காவில் **EPA (Environmunial prorecrion Agency), PPO ( Pollution Prevention office), PPIC(Pollurion, Precaution In tormation ciearing house)** என்பன தூய தொழில்நுட்ப கொள்கையுடன் இணைந்து செயற்படுத்தப்படுகிறது. இங்கிலாந்தில் **"Royal commission"** உம், கனடாவில் **'FEARO'** என்ற நிறுவனமும் தூய தொழில் நுட்பத்தினை நேரடியாக நடை முறைப்படுத்தலில் பங்களிக்கின்றது. இலங் கையில் மத்திய சூழல் அதிகாரசபை **(CEA)** பொறுப்பாக உள்ளது.



### தூய தொழில் நுட்ப அணுகல்

இவ் அணுகு முறை என்பது, தூய தொழில் நுட்பம் நடைமுறைப்படுத்தப்படுமிடத்து வெறியேறும் திண்ம-திரவ கழிவு நீர் தரம் பற்றிய கருத்துக்களை நிலைப்படுத்தல் ஆகும். அதாவது கழிவு பரிகரணம் என்பதனைக் குறிக்கின்றது. கழிவு நீரின் நிறம், வெப்பநிலை, கலங்கல் நிலை, மணம் என்ற பௌதீகக் காரணிகள் அடங்கும். இரசாயனப் பரிகரணம் என்பது திண்மக் கழிவு, உயிர் வாழ்வதற்கான ஒட்சிசன் தேவை **(BOD)**, இரசாயன ஒட்சியேற்றும் திறன் **(COD)** போன்றவற்றை உள்ளடக்கும். **BOD**என்பது ஒரு நாளுக்கு 1கி.லீ கழிவு நீரில் இருக்கக் கூடிய ஒட்சிசனின் மில்லி கிராம் அளவு. **COD** என்பது பொட்டாசியம் பேர் மங்கனேற்று($KMNO_4$) அல்லது பொட்டாசியம் குரோமேற்று ($K_2Cro_4$) அளவைக் குறிக்கும் உயிரியல் சோதனை என்பது கழிவு நீரிலுள்ள **(Sewage)**, பக்ரீரியா, பங்கசு, அல்கா, புரத்தோசோவா அளவைக் கணிப்பிடல் இதன் அளவு தீர்மானிக்கப்படுவது **BOD, COD**இன் பெறுமானத்தின் அடிப்படையிலேயாகும்.

இங்கு வெளியேறும் மாசுக்கள் பின்வரும் உபகரணங்களினால் கட்டுப்படுத்தப்படுகிறது

01. காற்றற்ற வடிகட்டி
02. துளையிடப்பட்ட நார்மிசை வடிகட்டி
03. மேலோட்ட காற்றற்ற கழிவுத்தடுப்பு
04. **"Asmex"** எனப்படும் மென்தகட்டு தொழில் நுட்பமுறை
05. காற்றற்ற திரவ அடிநிலைத் தாக்கி
06. வளைய அதி ஊதாக்கதிர் வீச்சுத்தாங்கி
07. கீழோட்ட நிலையின் படைத்தாக்கி.

நகரங்களில் செறிவான கழிவுநீர் அகற்றப்படும் வலைபோல் அமைந்த வடிகால்வாய்கள் மாசுக்களைக் கட்டுப்படுத்தும்.

### கழிவு நீ மாசுக்கள் அளத்தல்



01. காற்றில் தொங்கலான பதார்த்தங்கள் **(SPM)**, நிறுத்தல் முறையில் அளக்கப்படும்
02. கந்தகவீரொட்சைட்டு அமிலமய அளத்தல் முறையால் செறிவு காணப்படும்.
03. காபன் மொனொக்சைட்டு செந்நிற கதிர்ப்பு உறிஞ்சல் மூலம் அளக்கப்படும்
04. நீரற்ற அக்ரிடைன் முறைப்படி ஓசோன் அளக்கப்படும்.
05. நைதரசன் ஒட்சைட்டுக்கள் அளவு காட்டிக் குழாய் மூலம் அளக்கப்படும்.

இவ்வகையான தொழில் நுட்பத்தை மக்களிடம் செல்லுபடியாகச் செய்ய முகா மைத்துவ நிர்வாக முறைகள் பெரிதும் பயன்படும்.

### முகாமைத்துவ அணுகு முறை

"கழிவுகள் சிக்கனப்படுத்தல்" என்பதுடன் தொடர்புடையதே முகாமைத்துவ முறை உள்ளீடு, மனிதவளம், சக்தி என்ற மூன்று முக்கிய பதங்களைக் கையாள விஞ்ஞான முகாமைத்துவம் வழிவகுப்பதுடன் பின்வரும் நடைமுறைகள் சேர்ந்து காணப்படுகின்றது.

01. தூய தொழில்நுட்ப கருத்தை அறிதல், ஏற்றுக் கொள்ளல்
02. உள்ளீடு, சக்தி, மனிதவளம் சிக்கனப்படுத்தல்
03. தனியாளரின் கண்டுபிடிப்புக்கு முக்கியத்துவம் கொடுத்தல்
04. உள்ளும் புறமும் சுமுகமான சூழலைப் பேணல்

### நிர்வாக அணுகு முறை

தூய தொழில்நுட்ப அமுல்படுத்தல் நடைமுறைகளிலுள்ள, நடைமுறைச் சிக்கல்களைத் தவிர்த்தல். அதாவது சட்டச் சூழலுக்கு இணங்கிப் போதல். சில முக்கிய செயல் முறைகளாவன.

01. தூய தொழில் நுட்பத்துக்கு முன்னுரிமை வழங்கல்
02. சூழலியளாளர்களை கொள்கைத் திட்டமிடலில் ஈடுபடுத்தல்
03. கழிவு முகாமைத்துவ நிறுவனங்களை நிறுவுதல்
04. தனியார் நிறுவனங்களும் அரச நிறுவனங்களும் கழிவு முகாமைத்துவத்தை மேம்படுத்தல்
05. தூய தொழில் நுட்ப விரிவாக்க அலுவலகங்களை அமைத்தல்
06. திட்டமிட்ட இயந்திர விற்பனை நிலையங்களும், திருத்தும் நிலையங்களும் அமைத்தல்
07. வழிகோல் இயந்திர வடிவமைப்புச் **(Pilot Plant)** செய்தல்.
08. தூய தொழில்நுட்ப துண்டுப்பிரசுரங்கள் தொடர்ந்து வெளிவிடல்.

சக்தி, மனிதவளம் என்பவற்றுடன் சேர்ந்து தொழில் நுட்பம், கழிவு முகாமைத்துவத்துடன் பின்னிப் பிணைந்துள்ளதனால், சிறப்பான உற்பத்தி, நவீன உற்பத்தி, மாற்று உற்பத்தி என்பவற்றை இலகுவாக அடைய முடியும். எனவே தூய தொழில் நுட்பம் வளர விஞ்ஞான முகாமைத்துவம் இன்றியமையாதது.

# 20 வீதமான வனப்பிரதேசம் அழிப்பு; நிலத்தடி நீரும் குறைவடைந்து செல்கிறது!

(கொழும்பு)

மக்களின் நடவடிக்கை காரணமாக சுற்றாடலுக்கு ஏற்படும் பேரழிவு பயங்கரவாத நடவடிக்கைகள் மூலம் ஏற்படும் உயிர்ச் சேதத்திற்குச் சமமாகும் என்று மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர்மார்க்கார் தெரிவித்துள்ளார்.

சுற்றாடல் பாதுகாப்பிற்கு மக்கள் அனைவரும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று கூறினார்.

உலக மயமாக்கலின் கீழ் நாடுகள் பலவற்றில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி காரணமாக சுற்றாடலில் பெரும் தாக்கம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையின் வனப் பிராந்தியம் 20 சதவீதமாகக் குறைந்துள்ளது. என்று கூறிய அவர் நிலத்தின் கீழான நீர் வழங்கலும் 35 வீதத்துக்குக் குறைவடைந்துள்ளது என்று குறிப்பிட்டார்.

# ஊடகக் கல்வி டிப்ளோமா பயிற்சிநெறி விரைவில் ஆரம்பம்

(கொழும்பு)

தேசிய ஊடகக் கல்வி டிப்ளோமா பயிற்சி நெறியில் சேர்த்துக் கொள்ளப்பட இருப்பவர்களின் எண்ணிக்கை ஐம்பதாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

தேசியக் கல்வி நிறுவகம் தகவல் தருகையில் ஒரு வருடம் நீடிக்கும் இந்த டிப்ளோமா பயிற்சிநெறிக்கு ஊடகக் கல்வி சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொண்ட ஆசிரியர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும் என்று தெரிவித்துள்ளது. ஆசிரியர் சேவையில் ஐந்து வருட கால அனுபவத்தை அவர்கள் பெற்றிருப்பது அவசியமாகும். விண்ணப்ப முடிவுத் திகதி இம்மாதம் 15ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

# சூட்ஸ் அப்பிளிக்கேசன்ஸ்

அறிவியல் உலகம்

உலகிலே அதிக மென் பொருட்களை வெளியிடுபவர்களும் அதிக வாடிக்கையாளர்களைக்கொண்டதுமான ஒரே நிறுவனம் மைக்கிறோ சொவ்ற் ஆகும். இதன் வளர்ச்சி வர்த்தக ரீதியிலான போட்டியை நோக்காகக் கொண்டதாகும். இவ்வகையில் இந்நிறுவனத்துடன் போட்டியிடும் ஏனைய நிறுவனங்களும் புதிய புதிய மென் பொருட்களை தயாரித்தவண்ணமுள்ளன. இவ்வகையில் புதிய உத்தியாக பொது இலக்கு ஒன்றைக் குறித்து பலமென்பொருட்களைத் தொகுத்து விசேட பெயர்களில் வெளிவந்தவற்றை சூட் அப்பிளிக்கேசன்ஸ் **(Suite applications)** என்று அழைக்கின்றனர்.

வேட்புரோசசிங், ஸ்பிறெட்சீற், பிறசன்ரேசன், டேற்றாபேஸ், வெப்டிசைன் ஆகியவற்றுடன் தொடர்புடைய மென்பொருட்களைத் தொகுத்து ஒவ்வீஸ் சூட் **(Office suite)** என அறிமுகப்படுத்தியிருக்கின்றனர். இதற்கு உதாரணமாக எம்.எஸ்-ஒவ்வீஸ் - லோட்டஸ் ஸ்மாட்,சூட் **(Lotus smart suite)** கோரல் வேட்பே வெக்ற் சூட் **(Corel word perfect suite)** என்பவற்றைக் குறிப்பிடலாம்.

வெளியீட்டுத்துறை **(Puplications)** போட்டோ எடிற்றிங், வரைகலை **(Graphices)** ஆகிய இன மென்பொருட்களைத் தொகுத்து பப்பிளிக்கேசன்சூட் எனவும் அறிமுகப்படுத்தியுள்ளனர். இதற்கு உதாரணமாக அடொப்சூட் **(Adobe suite)** கோரல்சூட் **(Corel suite)** என்பவற்றைக் குறிப்பிடலாம்.


இவற்றைத் தவிர முதன்முதலாக சில கணினிமொழிகளைத் தொகுத்து டெவலப்பர் சூட் **(developer's suite)** என அறிமுகம் செய்திருக்கிறார்கள். மைக்கிறோ சொவ்ற் நிறுவனமே இதனை அறிமுகம் செய்திருக்கிறது.

**VisualBASIC, Visual foxpro, VisualC++, VisualJ++, Visual Inter Dev** ஆகிய கணினி மொழிகளை இணைத்து மைக்கிறோ சொவ்ற் விசுவல் ஸ்ருடியோ **(Microsoft Visual studio)** என வெளியிட்டிருக்கிறார்கள்.

### போட்டோ, வீடியோ அண்ட சவுண்ட்


### எடிற்றிங் ரூல்

எடிற்றிங் என்பது திருத்தம் மேற்கொண்டு புதியநிலையைத் தோற்றுவித்தலாகும். இந்த எடிற்றிங் ரூல்களும் அதே இலக்கைக் கொண்டிருக்கின்றன. புகைப்படங்களை இணைத்தல் **(Mixer)** வெட்டி எடுத்தல் **(Crop)** பின்னணி மாற்றுதல் நிறங்களை மாற்றுதல் ஆகிய செயற்பாடுகள் அனைத்தையும் போட்டோ எடிற்றிங்ரூல் மூலம் நிறைவேற்றமுடியும். இதற்கு




உதாரணங்களாக அடொப் போட்டோ சொப்,எம்.எஸ்.போட்டோ எடிற்றர் ஆகியவற்றைக் குறிப்பிடமுடியும்.

காட்சிகளை இணைப்பதற்கு **(Mixing)** காட்சிகளை இடைச் செருகல் செய்வதற்கு**(Inserting)** என எல்லா காட்சியமைப்பு மாற்றங்களையும் மேற்கொள்ள வீடியோ எடிற்றிங் ரூல் என்னும் வகையில் அடொப் பிறிமியர்( **Adobe primier**) போன்றன உள்ளன. இவ்வாறே இசையைக் கலத்தல் **(mixing)** இசைச் செருகல் **(Inserting)** போன்று அனைத்து இசையோடு தொடர்புடையவற்றில் மாற்றங்களை




மேற்கொள்ள **Sound editing tool** ஆக **Mp3** போன்ற மென்பொருட்களுமுள்ளன.

கணினி மென்பொருள்கள் என்பது இவற்றுடன் முடிவடைந்துவிடவில்லை. பலநூற்றுக்கணக்கில் பல்வேறுதுறைகளுக்கென ஒவ்வொரு மென்பொருட்கள் உள்ளன. அவற்றைப் பல்வேறு நிறுவனங்கள் தயாரிக்கின்றன. மென்பொருட்களில் அந்தந்தத் துறையினர் தமக்கு வேண்டிய மென்பொருட்களைப் பயன்படுத்த முடியும்.

**ஆர்.கே.ஜீவலிங்கம்**

---

# சுயாதீன தேர்தல் ஆணைக்குழு அமைக்காமல் பொதுத் தேர்தல் நடைபெறுவது சாத்தியமில்லை

## -சனாதிபதியே இழுத்தடித்து வருகிறார்

(கொழும்பு)

அரசியலமைப்பின் 17வது திருச்சச்சட்ட மூலத்தின்படி உருவாக்கப்படவுள்ள சுயாதீன தேர்தல் ஆணைக்குழு ஏற்படுத்தும் வரை நாட்டில் தேர்தல் நடைபெற வாய்ப்பில்லை என அறிவிக்கப்படுகிறது.

ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் பெயர்ப்பட்டியல் சனாதிபதியிடம் சமர்ப்பித்து எட்டு மாதமாகியும் அதற்கான அனுமதி கிடைக்காத நிலையில் பாராளுமன்றைக் கலைத்து புதிய தேர்தல் ஒன்றை நடத்துவது சாத்தியமில்லை.

இவ்வாறு தேர்தல் நடைபெறுமானால் அதனை எதிர்த்து மேல் முறையீடு செய்யவும் வாய்ப்புள்ளது. என சட்ட வல்லுனரான எதிரிசிங்க பத்திரிகை ஒன்றுக்கு கருத்துத் தெரிவித்துள்ளார்.

# இனந்தெரியாதோர் தாக்குதல்; தோப்பூரில் வர்த்தகர் உயிரிழப்பு

(திருமலை)

மூதூர் தோப்பூரிலுள்ள அல்லைநகர் கிராமத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றில் வர்த்தகரொருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் அதிகாலை 1.15 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் காயமடைந்த வர்த்தகரின் மனைவி சிகிச்சைக்காக சேருநுவர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மரணமான வர்த்தகர் ஆழ்ந்த நித்தி ரையில் இருந்தபோது வீட்டுக் கூரையைப் பிரித்து துப்பாக்கியால் சுடப்பட்டதாகவும் பின்னர் முற்றத்தில் கைக்குண்டொன்றை வெடிக்கச் செய்த பின்னர் கொலையாளிகள் தப்பிச் சென்றுவிட்டதாகவும் மூதூர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் என். சமரதுங்க தனிப்பட்ட விரோதமே இக்கொலைக்குக் காரணமெனவும் கூறியுள்ளார்.

## - பிரமுகா வங்கி திறப்பு -

# வழங்கப்பட்ட தீர்ப்பினை உயர் நீதிமன்றம் ஆராய்வு!

(கொழும்பு)

பிரமுகா வங்கியை மீண்டும் திறக்கும்படி மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு தடை விதிப்பதா என்பது பற்றி உயர் நீதிமன்றம் ஆராய்ந்து வருகின்றது.

உயர் நீதிமன்றத்தின் உத்தரவு நிறைவேற்றப்படுவதற்கு எதிராக மத்திய வங்கியும் இலங்கை நாணய சபையும் உயர் நீதிமன்றத்துக்கு முறைப்பாடு செய்துள்ளன. இதற்கமைய நாணய சபையின் சங்கத் தலைவர்களையும் வங்கியின் 225 வாடிக்கையாளர்களையும் நீதிமன்றத்தில் சமுகமளிக்கும் படி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## இன்று விவாதம்

(கொழும்பு)

இலங்கையைச் சூழவுள்ள கடற்பரப்பில் பெற்றோலிய வளமிருப்பது ஆய்வுகள் மூலம் கண்டறிவதற்கு ஊக்கமளிக்கும் வகையிலான சட்டமூலப் பிரேரணை இன்று பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

மின் சக்தி, எரிசக்தி அமைச்சர் கருஜயசூரிய இதனைத் தெரிவித்தார்.

# அரசிடமிருந்து போதிய உதவி கிடைக்காமையால் தெங்கு செய்கையை கட்டியெழுப்ப முடியாதுள்ளது

## - வடபிராந்திய முகாமையாளர் தெரிவிப்பு

விண்ணப்பங்கள் கோரப்பட்டதற்கு அமைவாக மானியங்கள் வழங்கி தெங்குப் பயிர்ச்செய்கையை நிவர்த்தி செய்வதற்கு போதியளவு நிதி கிடைக்காமையால் யாழ்ப்பாணத்தில் தெங்குப் பயிர்ச் செய்கையை மீளக் கட்டி எழுப்ப முடியாத நிலையில் உள்ளதாக தெங்குப் பயிர்ச்செய்கைத்துறையின் வட பிராந்திய முகாமையாளர் சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தற்போது தெங்குப் பயிர்ச் செய்கைக்கு கிடைத்துள்ள நிதியும் உதவித் தொகைகள் தொடர்பாகக் கேட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கைப் பொறுத்தவரையில் பல லட்சக்கணக்கான தென்னைகள் போரினால் இராணுவத்தினால் அழிக்கப்பட்டுள்ளது.

தெங்குப் பயிர்ச் செய்கைக்காக 5000த்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. ஆனால் இந்த விண்ணப்பங்களுக்கு அரசினால் நிதியுதவி வழங்கப்படாமையால் மானிய உதவிகளை மேற்கொள்ள முடியாமலுள்ளதாகவும், இதனால் 25000 ஏக்கர் அளவான நிலப்பரப்பு தெங்குப் பயிர் செய்கையில் மீள் நடுகை செய்ய முடியாமலுமுள்ளதாகத் தெரிவித்தார்.

இதற்காகக் கோரப்பட்ட நிதியுதவியை அரசு உடனடியாக வழங்குமாக இருந்தால் இன்னமும் எட்டு வருடத்திற்குள் மீண்டும் தெங்குப் பயிர்செய்கையைக் கட்டியெழுப்ப முடியும் என்றும் கூறினார். (33)

# யுத்தநிறுத்த ஒப்பந்தம் அமுலிலிருக்கையில் அவசர காலச்சட்டம் அர்த்தமற்றது

## - தமிழ்க் கூட்டமைப்பு பா.உ.கஜேந்திரகுமார்

யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுலில் இருக்கும் பொழுது அவசர காலச்சட்டம் கொண்டு வருவது அர்த்தமற்றதாகும். அவசர காலச்சட்டம் மீண்டும் கொண்டு வருவார்களானால் அதை நாங்கள் முற்றாக எதிர்ப்போம் என தமிழ்க் கூட்டமைப்பு பா.உ கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

புலனாய்வுத் துறையினரின் கொலைகள் சம்பந்தமாகவே அவசர காலச்சட்டம் அமுல் செய்வதென அரசு முடிவெடுத்தால் அது தவறு. இந்தக் கொலைகளைச் செய்வது யார் என்பதை சாட்சிகள் மூலம் நிரூபிக்க வேண்டும். நாட்டில் ஏற்படும் சிறிய சம்பவங்களுக்கு அவசர காலச்சட்டம் அமுல்படுத்துவார்களானால் அது ஒரு மடமைத்தனமான செயலாகும். நாட்டில் யுத்தம் ஏற்பட்டால் மட்டுமே அவசர காலச்சட்டம் அமுல்படுத்த முடியும். அரசு அவசரகாலச் சட்டத்தை மீண்டும் கொண்டுவராது என நான் நினைக்கிறேன் என மேலும் அவர் கூறினார்.

# கல்வி நிர்வாக சேவையில் 5000 பதவி வெற்றிடங்கள்!

கல்வி நிர்வாக சேவையில் 5000 வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் இருப்பதாக அகில இலங்கை ஐக்கிய ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

வலயக் கல்விப் பணிப்பாளர்கள், மேலதிக கல்விப் பணிப்பாளர்கள், நிர்வாகக் கல்விப்பணிப்பாளர்கள் தேசிய பாடசாலை அதிபர்கள், தேசிய பாடசாலை பதில் அதிபர்கள் ஆகியோருக்கான இந்த வெற்றிடங்கள் இதுவரையும் நிரப்பப்படவில்லை என இந்த ஆசிரியர் சங்கத் தலைவர் யால்வெல் பஞ்ஞாசே கர தேரர் தெரிவித்துள்ளார்.

பல வருடங்களாகவே இந்த வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. அத்துடன் கீழ்ப்பிரிவிலுள்ள அதிகாரிகளுக்கு பதவி உயர்வுகளும் வழங்கப்படவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்த வெற்றிடங்களை உடனடியாக நிரப்பி கல்விச் சேவையை தடையின்றி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கும் படியும் கல்வி, கலாச்சார மனிதவள அமைச்சர் கருணாசேன் கொடித்துவக்குவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# அனைவரும் ஒன்றாகச் செயற்பட்டால் நாட்டில் சமாதானம், சுபீட்சம் பிறக்கும்!

## - சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

அனைவரும் ஒன்றாக செயற்படுவோமானால் சமாதானமும் சுபீட்சமும் இந்த நாட்டில் எட்டும் காலம் வெகு தூரத்தில் இல்லை என்று சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரத்தினபுரியில் அமைந்துள்ள விகாரை ஒன்றின் தூபத்தைத் திறந்து வைத்து உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

நாட்டின் பிரதம மந்திரியும் சனாதிபதியும் வெவ்வேறு கட்சிகளில் இருந்த தெரிவு செய்யப்பட்டால் ஆட்சி சரிவரச் செயற்படமாட்டாது என்பதற்கு இன்றைய காலம் சாட்சியாக இருக்கின்றது என்று அவர் தெரிவித்தார்.

அரசாங்கம் இரண்டு பிரதான சாவல்களை சந்திக்கின்றது. முதலாவது சவாலாக சமாதானத்தை ஸ்திரமாக ஏற்படுத்த வேண்டும் இரண்டாவதாக இந்த நாட்டின் வலுவான பொருளாதார அமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

இந்த இரண்டு சவால்களையும் சட்டத்திற்கும் யாப்பின் அதிகாரத்திற்கும் இடையிலான முரண்பாடுகளுடன் செயற்படுத்த வேண்டியிருப்பதாக ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய சுபீட்சமான தேசம் ஒன்றை உருவாக்க முடியும் என்றும் அவர் வலியுறுத்தித் தெரிவித்தார்.

# குற்றச் செயலில் ஈடுபடுவோர் கட்சியிலிருந்து நீக்கப்படுவர்!

## - ஐ.தே.க. தலைமை முடிவு

(கொழும்பு)

கொலை மற்றும் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகக் கருதப்படும் உள்ளூராட்சி மன்றங்களில் செயற்படும் ஐ.தே.க. உறுப்பினர்கள் கட்சியில் இருந்து நீக்கப்படுவதாக பிரதமர் ரணில் அறிவித்துள்ளார்.

கட்சியின் எந்தவொரு உறுப்பினராயினும் அவர் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளுக்கு விளக்கம் அளிக்கும் கட்டாயத்தில் இருப்பதாகவும் இவ் அறிவித்தல் ஏனைய கட்சிகளுக்கு முன்னுதாரணமாக அமையும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந்த நடவடிக்கையானது சிறந்த அரசியல் கலாச்சாரத்திற்கான முதலாவது படிக்கல்லாக அமையும் என சிறிலங்கா கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த குணசேகர தெரிவித்துள்ளார்.

# சிங்கராசவனத்தை விஸ்தரிக்க அரசாங்கம் நடவடிக்கை

சிங்கராசவனம் விஸ்தரிக்கப்படும் எனக் கல்வி அமைச்சர் கலாநிதி கருணாசேன கொடித்துவக்கு கருத்துத் தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்டத்துக்கென கொள்வனவு செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான ஏக்கர் காணி சிங்கராசவனப் பிரதேச விஸ்தரிப்புக்கென அரசாங்கத்தினால் சுவிகரிப்புச் செய்யப்படவுள்ளது. உலகின் வரலாற்றுச் சிறப்பு மிக்க வனப் பிரதேசமாக சிங்கராசவனம் திகழும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தினாலும், மண்சரிவினாலும், சட்டவிரோதமான முறையில் மரங்கள் வெட்டப்படுவதனாலும் இந்த வனம் பெருமளவு சேதமடைந்துள்ளது. இதனைத் தவிர அத்துமீறிக் குடியேறுபவர்கள், தேயிலை,றப்பர் தோட்டங்களை அமைப்போர், மர வியாபாரிகள் ஆகியோர்களாலும் சிங்கராசவனத்துக்குப் பெருமளவு சேதம் ஏற்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட சுற்றாடல் ஓவியக் கண்காட்சியைத் திறந்து வைத்துப் பேசுகையில் இவ்வாறு கூறினார்.

## அநாதரவாகக் கிடந்த இளைஞர் மரணம்!

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டியில் வீதியோரம் அநாதரவாகக் கிடந்த இளைஞர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சில நிமிடங்களில் மரணமானார்.

சடலத்திலிருந்த அடையாள அட்டை மூலம் இவர் சிறீஸ்கந்தராசா சிறீஸ்வரன் (வயது-28) முல்லை வீதி, பரந்தன் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை மாலை அல்லைப்பிட்டி வீதியோரமாகக் கிடந்த இவரை அவ்வீதியால் சென்ற இருவிறகு வெட்டிகள் வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர்.


ஈராறுதிங்களுடன் முதலாம் ஆண்டு நினைவிலே



மண்ணுலகில்
16 □ 01 □ 1952

விண்ணுலகில்
20 □ 06 □ 2002

திருமதி மகேஸ்வரி இராசேந்திரம்
(செம்பியன்பற்று தெற்கு - செம்பியன்பற்று)
திதி: 08-07-2003

எளிமையின் சிகரமே அம்மா!
ஏற்றங்கள் நாம் காண
ஏணியாய் நின்ற உத்தமியே!
உங்கள் அன்பான வதனம் கண்டு
ஆண்டு ஒன்று போனதம்மா!
அழுகின்றோம் தினம் உம்மைத்தேடி!
விண்ணகம் விரைந்து சென்றீர்களே!
தாங்க முடியவில்லை அம்மா!
அன்னையற்ற பிள்ளைகளானோம்
ஆதரிக்க எமக்கு யாருமே இல்லை!
ஆறுதல் சொல்ல வாருங்கள் அம்மா!

வைத்தியசாலை விடுதி,
தருமபுரம்.
(3423)
உங்கள் பிரிவால் துயருறும்
கணவர், பிள்ளைகள்.


## விபத்துக்களில் நால்வர் பலி!

(கொழும்பு)

தென்பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற வாகன விபத்துக்களில் நால்வர் உயிரிழந்துள்ளதுடன் 50க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

மாவனெல்ல, கொக்கரல்ல, கொழும்பு ஆகிய பகுதிகளிலேயே இந்த வாகன விபத்துக்கள் இடம் பெற்றதாகப் பொலிஸ் நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் பலர் கவலைக்கிடமான நிலையில் இருப்பதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## மீனவரை காணவில்லை!

(மட்டக்களப்பு)

கல்முனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சாய்ந்தமருது கடற் பிரதேசத்தில் மீன்பிடிக்கச் சென்ற மூன்று முஸ்லிம் மீனவர்கள் காணாமல் போயுள்ளனர்.

இவர்களைத் தேடும் பணி தற்போது இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பாவனைக்குதவாத கணினிகள்!

பலாலி ஆசிரியர் கலாசாலைக்கு கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட கணினி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டி என்பன பயன்பாட்டிற்கு உரியவாறு இல்லை எனக் கூறப்படுகின்றது.

இவ்வுபகரணங்கள் வழங்கப்படும் போது அவற்றுடன் சம்பந்தப்பட்ட பல உதிரிப்பாகங்கள் அவற்றில் காணப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## தப்பியோடிய சிப்பாய் கைக்குண்டுடன் கைது!

(கொழும்பு)

மத்துகம மீகா தென்ன பொலிஸ் பிரிவில் பல்வேறு குற்றச் செயல்களோடு சம்பந்தப்பட்டவரும் இராணுவத்தில் இருந்து தப்பியோடியவருமான நபர் ஒருவர் K-400 ரக அதிசக்தி வாய்ந்த கைக்குண்டுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பின்னர் நடத்தப்பட்ட விசாரணைகளின் போது, இவர் வெலிஓயா இராணுவ முகாமில் கடமையாற்றி வந்ததாகவும் மேற்படி பொலிஸ் பிரிவில் வீடொன்றை தீவைத்தமை தொடர்பாகவும் இவர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்ததாகவும் தெரியவருகிறது.


கிளி/மாவட்ட வைத்தியசாலை சிகிச்சைப் பிரிவுகள்

ஆரம்ப விழா

அன்புடையீர்!

கிளி. மாவட்ட வைத்தியசாலையின் பழைய அமைவிடத்தில் சிகிச்சைப்பிரிவுகள் மீளவும் அமைக்கப் பெற்று, ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதால் அதில் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கிறோம்.

ஆரம்பிக்கப்படவிருக்கும் சிகிச்சைப்பிரிவுகள்

01. வெளிநோயாளர் பிரிவு
02. அவசர சிகிச்சைப் பிரிவு
03. பற்சிகிச்சைப் பிரிவு
04. ஆய்வு கூடங்கள்
05. X-கதிர்ப்பிரிவு
06. சத்திர சிகிச்சைக் கூடம்
07. இரத்த வங்கி
08. தற்காலிக பெண்கள் விடுதி
09. தற்காலிக ஆண்கள் விடுதி

இடம்:- கிளி. நகர்
காலம்:- 09-07-2003(புதன்)
நேரம்:- காலை 8.00 மணி
(3422)



31ம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு
1924
08
18



இறப்பு
2003
06
08

அமரர்
தம்பையா செல்வத்துரை
(வீதானையார்)
(3ம் வாய்க்கால், பன்னங்கண்டி, பரந்தன்)

அன்பின் திருவுருவாய் பண்பின் சிகரமாய் நேர்மையின் சின்னமாய் குடும்பத்தின் ஒளிச்சுடராய் இருந்து எம்மைப் பாசத்தோடு வளர்த்து நன்நெறி காட்டி ஆளாக்கியவர்கள் அன்புத் தெய்வமே எம் காலங்கள் உள்ளமட்டும் உங்கள் நினைவு கண்ணீராக எம் கண்களில் என்றென்றும் வாழ்வீர்கள். உங்கள் ஆத்மா இறைவனடி சேரப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் ஈமக் கிரியைகளில் கலந்துகொண்டு உதவிகள் பல செய்த, கண்ணீர் அஞ்சலி செலுத்திய, அனுதாபச் செய்திகள் அனுப்பிய எங்கள் அன்பு உள்ளம் கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல.20, கற்குழி
வவுனியா.
(சி-8222)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.



31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு
1924 □ 08 □ 18



இறப்பு
2003 □ 06 □ 08

அமரர் உயர்திரு
தம்பையா செல்வத்துரை
(வீதானையார்)

அன்னார் எமது குடும்பத்தின் அன்பிற்கும் நன்மதிப்புக்குமுரிய நண்பராக இருந்து கரைச்சிப் பிரதேசத்தின் 3ஆம் வாய்க்கால் பன்னங்கண்டிப் பகுதியில் பல அளப்பரிய சேவைகளைப் புரிந்ததோடு பன்னங்கண்டிப் பிள்ளையார் ஆலயத்தின் பரிபாலன சபைத் தலைவராகவும் இருந்து மக்களின் நீண்ட கால நன்மதிப்பைப் பெற்ற ஓர் அன்பராக விளங்கினார்.

அன்னாரது இழப்பு எமது குடும்பத்துக்கு மட்டுமன்றி பன்னங்கண்டி மக்களுக்கும் ஓர் பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நாம் அனைவரும் பிரார்த்திக்கின்றோம்.

வி.எம்.கே குடும்பத்தினர்,
வி.எம்.கே. தங்கமாளிகை,
கிளிநொச்சி,
சாவகச்சேரி.
(சி-8221)



### சிந்தனைக்கு

மனிதர்களின் இருப்பைவிட, மனிதர்களின் செயற்பாடே போராட்ட வரலாற்றின் சக்கரத்தைச் சுழற்று கின்றது.

தமிழீழத்தேசியத் தலைவர்

ஈழநாதம்
EELANATHAM - மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 08-07-2003

## சந்திரிகா அணியில் படைத்தரப்பு!

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே. முன்னணி அரசாங்கம் பரிசீலித்துவரும் பாதுகாப்புச் சபை சட்டமூலமானது அநாவசியமானது என்ற முப்படைத்தளபதிகளின் அபிப்பிராய மானது, அவர்களும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் வழியில் சிந்திப்பவர்களாக உள்ளதையே வெளிக்காட்டுகின்றது. வேறுவிதமாகக் கூறுவதானால், சனாதிபதி சந்திரிகாவின் ஆணையின் கீழ் செயற்பட விரும்புகின்றனர் என்றே கருத இடமுண்டு.

பாதுகாப்புச் சபை குறித்த உத்தேச மசோதா சட்டமூலம் இன்னமும் முழுவடிவம் பெறவில்லை. அது குறித்த தகவல்கள் சிலவே இதுவரையில் வெளிவந்துள்ளன.இதேசமயம் இப்பாதுகாப்புச் சபை சட்டமூலமானது அரசியல் யாப்பு விதிகளுக்குட்பட்டதா? இல்லையா? என்பது குறித்த கேள்விகளும் பலமாகவே உள்ளன. பெரும்பாலான நோக்கர்கள் இச்சட்டமூலமானது அரசியல் யாபபுடன் முரண்பாடு கொண்டதாகவே இருக்கும் என அபிப்பிராயம் கொண்டுள்ளனர்.

இந்தவகையில், இப்பாதுகாப்புச் சபை சட்டமூலம் நிறைவேற்றப்படுமா? என்பது குறித்த கேள்விகள் பலமாகவே உள்ளன. ஆனால், இப்பாதுகாப்புச்சபை சட்டமூலமானது, சனாதிபதி பாதுகாப்பு அமைச்சில் மேற்கொள்ளும் தலையீடுகள், ஆயுதப் படைகள் மூலம் அரசாங்கத்தின் நிலைப்பாட்டிற்கு மாறாக எடுக்கும் நடவடிக்கைகள் என்பவற்றைக் கட்டுப்படுத்துவதற்கானது என்பது வெளிப்படையானது.

வேறுவிதமாகக் கூறுவதானால், இத்தகையதொரு சட்டமூலத்திற்கான தேவையை உருவாக்கியவரும் சனாதிபதி சந்திரிகா என்றே கூறுதல் முடியும். அதாவது, பாதுகாப்பு அமைச்சருக்கும், அமைச்சிற்கும் தெரியாமலே விடுதலைப் புலிகளின் கப்பல் ஒன்றை கடற்படையினரைக் கொண்டு மூழ்கடித்தமையானது அரசாங்கத்தின் கையறு நிலையை வெளிப்படுத்தும் ஒன்றாகியது. இது ஒருபுறத்தில் அரசாங்கத்திற்கு அவமானமானதொன்றாகவும், மறுபுறத்தில் அதன் சமாதான முயற்சிகளுக்கு விடுக்கப்பட்ட சவாலாகவும் கொள்ளத்தக்கதாகியது.

இந்நிலையில் அரசாங்கம் சனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கவும் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்குச் சனாதிபதி இடையூறு செய்வதைக் கட்டுப்படுத்தும் நோக்கிலும் புதிய சட்டமூலத்தைக் கொண்டுவர முற்பட்டு நிற்கின்றது. இதன் மூலம் ஆயுதப் படைகளைப் பாராளுமன்றத்திற்கும் அமைச்சரவைக்கும் கட்டுப்பாடுடையவர்கள் ஆக்குவது அரசாங்கத்தின் நோக்கமாகும். சட்டமூலமானது சனாதிபதியால் நிச்சயமாக எதிர்க்கப்படும் என்பது எதிர்பார்க்கப்படும் ஒன்றே ஆயினும், தற்போது முப்படைத் தளபதிகளின் எதிர்ப்பிற்கும் உள்ளாகியுள்ளமையானது இச்சட்டமூலத்திற்குப் பலமான எதிர்ப்பு வெளிப்படுத்தப்படலாம் என்பதையே உணர்த்துவதாயுள்ளது.

இவ் எதிர்ப்பானது வெளிப்படையாக சனாதிபதியின் அதிகாரத்தைக் குறைப்பதற்கு எதிரானது என வெளிப்படுத்தப்படினும், அடிப்படையில் ஐ.தே. முன்னணி அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கும், யுத்தநிறுத்தத்திற்கும் எதிரானதெனக் கொள்ளுதலே சரியானதும், பொருத்தப்பாடானதுமாகும். அதாவது, யுத்தம் தொடரப்பட வேண்டும் என்ற ஆர்வலர்களின் விருப்பின்பாற்பட்டதாகும்.

ஏனெனில் இச்சட்டமூலத்தை தோற்றுவிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை உருவாக்கிய போது - அதாவது புலிகளின் கப்பலை மூழ்கடிக்க உத்தரவிட்டபோது இது யுத்த நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்துவிடும் என்றே சனாதிபதியால் கருதப்பட்டது. வேறுவிதமாகக் கூறுவதானால் இச் சம்பவமானது விடுதலைப்புலிகளைச் சீண்டும் என உறுதியான நம்பிக்கையுடனேயே அவர் இதை மேற்கொண்டார். இதன் மூலம் சமாதான முயற்சிகள் முடிவுக்குக் கொண்டு வரப்படும். புலிகள் யுத்தத்தில் இறங்குவது கேள்விக்கிடமற்றதாகிவிடும் எனவும் அவர் மதிப்பீடு செய்தார்.

ஆனால், அவரது மதிப்பீடு தவறாகிப் போனது. விடுதலைப்புலிகள் என்றுமில்லாத பொறுமையுடனும், நிதானத்துடனும் நிலைமையைக் கையாண்டமை காரணமாக சனாதிபதியின் எதிர்பார்க்கை/மதிப்பீடு தவறாகியது. ஐ.தே.முன்னணி அரசாங்கத்துடன் மேலும் ஒரு சர்ச்சையில் ஈடுபடவேண்டியதொரு சூழ்நிலை உருவாகியுள்ளது. இச சர்ச்சை தீர்வதற்கு உயர் நீதிமன்றம் வரையில் செல்ல வேண்டியதாகக்கூட இருக்கலாம்.

ஆனால், இச்சர்ச்சைக்கு எத்தகைய தீர்ப்புக் கிடைக்கும் என்பது ஒருபுறம் இருக்க, இச் சர்ச்சையில் சனாதிபதியின் பக்கத்தில் முப்படைகளின் தளபதிகள் இருக்கையில் அரசாங்கத்தால் இதில் எந்தளவிற்கு முன்னேற்றம் காணமுடியும் என்பது கேள்விக்குரியதாகவே இருக்கும். ஏனெனில் உத்தரவிடும் அதிகாரம் பெற்றவர்களும், நிறைவேற்றுபவர்களும் ஒரே அணியில் இருக்கையில் இடையிலுள்ள அரசாங்கம் இவர்களைத் தமது செல்வாக்கிற்குள் உட்படுத்துதல் என்பது கடினமானதே.

ஆனால், நிச்சயமாக சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் காணப்பட வேண்டுமானால், சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் குறித்த சர்ச்சைக்கு முடிவு காணப்படுதல் வேண்டும். அவ்வாறு இல்லாதுவிடில் சனாதிபதியின் குறுக்கீடுகள் தொடர்ந்த வண்ணமே இருக்கும். சமாதான முயற்சிகளுக்கு இடையூறுகள் ஏற்படுத்தப்பட்ட வண்ணமே இருக்கும். இதனால் வெண்ணெய் திரண்டுவரும் போது தாழி உடைந்தது போன்ற நிலை கூடச் சமாதான முயற்சிகளுக்கு ஏற்படினும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# யுத்தத்திற்கு முடிவுகட்ட அரசாங்கத்திடம் உருப்படியான திட்டங்கள் எதுவுமில்லை!

## - சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவிப்பு

வடக்கு-கிழக்கு யுத்தத்திற்கு முடிவுகட்ட ஐக்கிய தேசிய முன்னணி அரசிடம் எந்தத் திட்டமும் இல்லை. விடுதலைப் புலிகளிடம் நாட்டின் ஒரு பகுதியைக் கொடுத்து விட்டு இவர்கள் கொழும்பில் சுகமாக வாழ நினைக்கிறார்கள். அதிகாரத்தை எங்கு எவ்வாறு பாவிப்பது என்பது எனக்குத் தெரியும். நான் என்றபடியால் அமைதியாக அரசாங்கம் செயற்படுகிறது. இவ்வாறு சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

மாகாணசபைகளினால் எந்தப் பிரயோசனமும் இல்லை. அவற்றை இல்லாமல் செய்துவிட வேண்டும் எனச் சிலர் கருத்து வெளியிட்டாலும் நாட்டின் பல பிரதேசங்களில் அவை மக்களுக்கு நல்ல சேவைகளையே செய்து வருகின்றன என்று அநுராதபுரத்தில் அண்மையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஐந்துமாடிகளைக் கொண்ட வைத்தியசாலைக்கட்டடத்தை திறந்து வைத்துப் பேசிய போதுகூறினார்.

நாம் ஆட்சியிலிருக்கும் போது நல்ல கல்விமுறையை ஏற்படுத்தினோம். துப்பாக்கிகள், குண்டுகள் கையாள்வதிலிருந்து அப்பாற்பட்ட மாணவர்களையும் போதைப் பொருட்களிலிருந்து விலகிச்சென்ற மாணவ சமுதாயத்தையும் உருவாக்கினோம். இவ்வரசாங்கம் அவற்றுக்கு துணை புரிகின்றது. 1994ஆம் ஆண்டும் ரணில் பிரதமராகவே இருந்தார். அப்போதும் உலகநாடுகள் உதவி வழங்கவில்லை. அதற்குக் காரணம் இந்நாட்டில் நிலவிய ஊழல்களும் மோசடிகளுமே. வடக்கு கிழக்கில் நடைபெறும் யுத்தத்தை முடிவுகட்ட ஒரு திட்டமும் இல்லை. முதலமைச்சர்கள் திட்டமிட்டு செயற்படுவதில்லை.

இன்று அரசியல் வாதிகளும் அமைச்சர்களும் விடுதிகளிலும் திருமணவீடுகளிலும் பைத்தியக்காரர்கள்போல் நடந்து கொள்கின்றனர். அவர்களின் புதல்வர்களும் அப்படியே விடு தலைப்புலிகளிடம் நாட்டின் ஒரு பகுதியைக் கொடுத்து விட்டு கொழும்பில் சுகமாக வாழ நினைக்கின்றனர். இந்த நிலை சனாதிபதி என்ற வகையில் எனக்கு வெட்கமளிக்கின்றது. அச்சமளிக்கின்றது. அச்சம் என்னைப்பற்றியதல்ல. நாட்டையும் மக்களையும் பற்றியது என்று கூறி யுள்ளார். இதன்போது கூட்டத்தில் இருந்த இளைஞர்கள் குழு அதிகாரத்தை பாவியுங்கள் என்று கூச்சலிட்டனர்.

மேலும் அதிகாரத்தை எங்கு எவ்வாறு பாவிப்பது என்பது எனக்குத் தெரியும். நான் என்ற படியால் அமைதியாக அரசாங்கம் செயற்படுகின்றது. ரணில் போன்ற ஆட்களுக்கு இவ்வதிகாரங்கள் கிடைத்திருப்பின் எங்கள் கருத்துகளும் மிஞ்சியிருக்காது என்று அவர் கூறினார்.

# சுதந்திரக் கட்சி- ஜே.வி.பி கூட்டணியில் ஈ.பி.டி.பிக்கும் இடமளிக்க ஏற்பாடு!

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி) கூட்டமைப்பில் ஈழமக்கள் ஜனநாயக கட்சி (ஈ.பி.டி.பி) தேசிய ஐக்கிய முன்னணி (நு.ஆ) ஆகிய கட்சிகளையும் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் கூட்டமைப்பின் தலைமைப் பதவி சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவுக்கே வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, சுதந்திரக்கட்சி-ஜே.வி.பி. கூட்டமைப்பை மேலும் பரந்த அடிப்படையில் தேசியக் கூட்டமைப்பாக மாற்றியமைக்கும் யோசனைகளும் சனாதிபதியினால் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் வாரங்களில் ஈ.பி.டி.பி. கட்சித் தலைவர்களுடன் சனாதிபதி இது தொடர்பாக பேச்சு வார்த்தைகள நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# கூட்டணி குறித்த அடுத்த சுற்றுப் பேச்சுக்கள் இவ்வார இறுதியில் நடைபெற ஏற்பாடு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சி-ஜே.வி.பி. கூட்டணி தொடர்பான அடுத்த சுற்றுப் பேச்சு இவ்வார இறுதியில் நடைபெறுமென அறிவிக்கப்படுகிறது. இப்பேச்சுக்கள் கடந்த 5ஆம் திகதி நடைபெறத் திட்டமிடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இதுவரை இணக்கப்பாட்டுக்கு வந்துள்ள விடயங்கள் பற்றி பொ.ஐ. முன்னணியின் ஏனைய கட்சி உறுப்பினர்களுடன் கலந்து ஆலோசித்த பின்னர் ஜே.வி.பி யினருடன் விசேட பேச்சுக்கள் நடத்தப்படவுள்ளதாக சனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கமைவாகவே மேற்படி பேச்சுக்கள் வார இறுதியில் நடைபெற உள்ளது.

## ரத்வத்த சிகிச்சைக்கு அனுமதி

கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருக்கும் முன்னாள் பிரதிப் பாதுகாப்பமைச்சர் ஜெனரல் அநுருத்த ரத்வத்த சுகயீனம் காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.மருத்துவர்களின் ஆலோசனைக்கமைய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெறும் இவரது உடல்நிலை தற்போது சுகமடைந்து வருவதாக தெரிவிக்கப்படுகின் றது. அநுருத்த ரத்வத்தவிற்கு தேவையான பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் ரூமி மர்சூக் தெரிவித்துள்ளார்.



## சச்சின், லாறா பங்கேற்ற கார் பந்தயப் போட்டி

சென்னையையடுத்த நாவலூரில் கிரிக்கெட் முன்னணி வீரர்கள் பங்கேற்ற எம்.ஆர்.எவ் நிறுவனத்தின் கார்பந்தயப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

சச்சின் டெண்டுல்கர், அவுஸ்திரேலிய டெஸ்ட் கிரிக்கெட் அணித்தலைவர் ஸ்ரீவ்வோ, மேற்கிந்தியத்தீவுகள் அணியின் தலைவர் லாறா, அவுஸ்திரேலிய முன்னாள் வேகப் பந்து வீசாளர் டென்னிஸ் லில்லி ஆகியோர் பங்கு கொண்டனர்.

சச்சின் டெண்டுல்கர் பத்தாம் இலக்கக் காரில் களம் இறங்கி, தொடக்கம் முதலே நிலையான வேகத்துடன் காரைச் செலுத்தி ஒவ்வொரு சுற்றிலும் முன்னிலை பெற்று வந்தார்.

ஆனால் இறுதிச் சுற்றில் டெண்டுல்கர் தனக்குப் பின்னால் வந்த 03 பேரும் ஒன்று சேரும் படி மெதுவாகக் காரை செலுத்தினார். இறுதியில் அனைவரும் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.




## சிம்பாவ்வே தகுதி

அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஆபிரிக்கக் கிண்ண உதைபந்தாட்ட இறுதிச் சுற்றில் விளையாடுவதற்கு சிம்பாவ்வே அணி தகுதி பெற்றுள்ளது.1980 ஆம் ஆண்டில் பிரித்தானியாவிடம் இருந்து சுதந்திரம் பெற்ற பின்னர் ஆபிரிக்க நாடுகளுக்கிடையிலான போட்டியில் விளையாடும் சிம்பாவ்வே அணி முதல் தடவையாக இறுதிச் சுற்றில் விளையாடுகின்றது. இறுதிச் சுற்றில் 16 அணிகள் விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



விம்பிள்டன் டென்னிஸ் கப் போட்டியில் கலப்பு இரட்டையர் ஆட்டத்தில் வெற்றி பெற்ற இந்தியாவின் லியாண்டர் பயஸ் அமெரிக்காவின் மாட்டினா நவரத்திலோகா இணை.

# கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் சிங்களத்தில் முறைப்பாடு பதிவு!

(யாழ்ப்பாணம்)

யாழ். கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் யாவும் தனிச் சிங்களத்திலேயே பதியப்படுவதால் மக்கள் மிகவும் விசனமடைந்துள்ளனர்.

இந்தப் பிரச்சினை பல பொலிஸ் நிலையங்களிலும் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்ட பின்னர் இதனை மாற்றுவதாகப் பொலிஸ்மா அதிபர் அறிவித்திருந்தார். இதன் பின்னர் இவ்வாறான முறைப்பாடுகள் யாவும் தமிழில் பதிவு செய்யப்பட்டு வந்தன. ஆனால் தற்பொழுது மீண்டும் தனிச் சிங்களத்தில் பதிவுகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிய வருகிறது. இவ்வாறு தனிச் சிங்களத்தில் அனுப்பப்படும் பொலிஸ் கட்டளைகளை விளங்கிக் கொள்வதற்கு மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அத்துடன் இந்தப் பொலிஸ் பிரிவில் ஒரே ஒரு தமிழ் தெரிந்த பொலிஸ் மாத்திரமே கடமையில் இருப்பதாகவும் தெரிய வருகின்றது. இதனால் முறைப்பாடுகளைப் பதிவு செய்ய அந்தப் பொலிஸ் நிலையத்துக்குச் செல் வோர் மிகவும் கஷ்டப்பட்டே தமது முறைப்பாடுகளைப் பதிவு செய்கின்றார்கள். ஒரு முறைப்பாடு சிங்களத்தில் பதிவு செய்யப்பட்டால் அதனை மீண்டும் தமிழில் முறைப்பாட்டுக் காரருக்கு வாசித்துக் காட்டப்பட வேண்டும் என்பது குறிப்பிடத் தக்கது. (33)

## போராட்டத்தில் இணைய முன்வந்த சிறுவர்கள் பெற்றோரிடம் ஒப்படைப்பு

வயது குறைந்த சிறுவர்கள் இருவர் போராட்டத்தில் இணைவதற்காக வந்தபோது அவர்கள் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்ட நிகழ்வு திருகோணமலையில் நடைபெற்றது.

திருகோணமலையில் உள்ள சம்பூர் அரசியல் துறைச் செயலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் திருமலை அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக் யுனிசெப் அதிகாரிகள் முன்னிலையில் அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைத்துள்ளனர்.

## இடைக்கால நிர்வாகம் குறித்து

## பாராளுமன்றப் பிரதிநிதித்துவமுள்ள கட்சிகளின் ஆதரவுபெற கூட்டமைப்பு முயற்சி

வடக்கு-கிழக்கில் இடைக்கால நிர்வாக அலகு ஒன்றை அமைப்பதற்குப் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கும்சகலஅரசியல் கட்சிகளின் ஆதரவைப் பெறுவதற்கான முயற்சி ஒன்றைத் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆரம்பிக்கவிருக்கின்றது.

இன்னும் சில நாட்களுக்குள் இதற்கான பேச்சுக்களை அரசியல் கட்சிகளுடன் அது நடத்த விருக்கின்றது. கூட்டணியின் சிரேஷ்ட தலைவர் ஒருவர் கருத்துக் கூறுகையில், தமது கட்சி முக்கியமாகப் பொதுசன ஐக்கிய முன்னணியுடன் பேச்சுக்களை நடத்தும் என்றார். சமாதானத்தை வெற்றிகரமாக கொண்டு நடத்துவதே இதன் நோக்கமாகும் என்றும் கூறினார்.

பேச்சுக்களின் போது வடக்கு-கிழக்குக்கு இடைக்கால நிர்வாகத்தின் அவசியம் தொடர்பாகவும் வலியுறுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

## வீரவேங்கை தருமனுக்கு நாளை நினைவுக்கல் திரைநீக்கம்

செம்மலைப் பகுதியில் எதிர்பாராத விபத்தில் காயமடைந்து 27-10-1987இல் இந்தியா மதுரை வைத்தியசாலையில் வீரச்சாவடைந்த வீரவேங்கை தருமன் (முருகையா ஜெயமுகுந்தன், 3ஆம் கட்டை, உப்புவெளி, திருமலை) எனும் மாவீரருக்கு நாளை நினைவுக்கல் திரைநீக்கம் செய்து வைக்கப்படவுள்ளது. மேற்படி மாவீரரின் திருவுருவப் படம் அவரது தற்காலிக இல்லமான போராளி மனோச் என்பவரின் 8ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு வீட்டில் வைக்கப்பட்டு நாளை முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு நினைவுக்கல் திரைநீக்கம் செய்யப்படவுள்ளது. (26)

## மட்டு.நகரில் தமிழ்க்குழுக்களின் பாதுகாப்பு மேலும் அதிகரிப்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் தமிழ்க்கட்சிகளின் அலுவலகங்கள் அமைந்துள்ள பகுதிகளில் சிறிலங்காப் படையினரினால் வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வலுவலகங்களை அண்டிய வீதிகளில் படையினரின் ரோந்தும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பி. அலுவலகம் அமைந்துள்ள பகுதி, ஈ.பி.ஆர்.எல்.எப் வரதர் அணி அலுவலகம் அமைந்துள்ள முதலாவது லேக் வீதி மற்றும் புளொட் அலுவலகம் அமைந்துள்ள வீதி ஆகிய பகுதிகளிலேயே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அநாவசியமாக வெளியில் உறுப்பினர்களை நடமாட வேண்டாமென இக்கட்சிகளுக்கு பொலிசார் அறிவுறுத்தியுள்ளனர்.

## தோப்பூரில் கைக்குண்டு வீச்சில் முஸ்லிம் ஒருவர் பலி; ஒருவர் காயம்

திருகோணமலை தோப்பூரில் இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதலில் முஸ்லிம் ஒருவர் பலியானார். அவரது மனைவி காயமடைந்தார். கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இத்தாக்குதலில் அப்துல் பரீஸ் என்பவரே பலியானவராவார் இவரது மனைவி படுகாயமடைந்து தோப்பூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## திருவிழா

கண்டாவளை பத்தன் மோட்டை முருகன் ஆலயத்தில் மணவாளக் கோலத்திருவிழா இன்று இரவு நடைபெறவுள்ளது.

இரவு விசேட அபிஷேகம் நடைபெற்று அதிகாலை 4.30 மணிக்கு வசந்த மண்டபத்தில் விசேட தீபாராதனைகள் நடைபெற்று வீதி உலாவும் இடம் பெறும். (14)

## கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கத்தால் நெல்லுக்கு மாற்றீடாக பசளை, கிருமிநாசினி

(அலுவலக செய்தியாளர்)

கரைச்சி தெற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் அதன் பரப்புக்குட்பட்ட பகுதி விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்வனவு செய்யப்பட்டு அதற்கு மாற்றீடாக பசளைகள் மற்றும் கிருமிநாசினிகள் வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த பெரும்போக காலத்தில் விவசாயிகளால் அறுவடை செய்யப்பட்ட நெல்லை இன்னமும் விற்பனை செய்யமுடியாது இருப்பதால் விவசாயிகளால் அடுத்த கட்ட விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியாதுள்ளது. எனவே அவர்கள் அடுத்த கட்ட முயற்சிகளை மேற்கொள்ளும் பொருட்டு ஒருவரிடம் 10 மூடைநெல் 850 ரூபா வீதம் பெறப்பட்டு கிருமிநாசினி மற்றும் உரவகைகள் என்பன வழங்கப்பட்டு வருகின்றது.

(வே)

### 40 மில்லியன்...

இதன் பிரகாரம் கைதடி வயோதிபர் இல்லம், சாவகச்சேரிப் பொதுச் சந்தை, திருநெல்வேலி கொக்குவில் பொதுச்சந்தை என்பன உட்பட 14 கட்டடங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தில் நிதி மோசடிகள் இடம் பெற்றுள்ளதாகவே முறைப்பாடு செய்யப்பட்டது.

மேற்படி கொழும்புக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி தலைமையிலான குழு யாழ். செயலகத்தின் பிரதம எழுதுனர் குழு இச் சம்பவம் தொடர்பான வாக்குமூலத்தைப் பதிவு செய்திருந்தது. இந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் யாழ். மாவட்ட நீதிமன்றில் முன்னாள் அரச அதிபர் சண்முகநாதனுக்கு எதிராக வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

இதேவேளை, 1999 ஆம் ஆண்டு முதல் 2002ஆம் ஆண்டு வரையான காலப் பகுதி வரை யாழ். பிரதான வீதியிலுள்ள மக்கள் வங்கியின் ஊடாக மேற்படி அரச அதிபரினால் கையாளப்பட்டதாகத் தெரிவிக்கப்படும். 58 காசோலைகள் தொடர்பான ஆவணங்களையும் பார்வையிடுவதற்கான அனுமதியை வழங்குமாறு கொழும்பு குற்றப் புலனாய்வுப் பொறுப்பதிகாரி நீதிமன்றிடம் கோரிக்கை ஒன்றினை விடுத்தார்.

மேற்படி வங்கியிலுள்ள 58 காசோலைகளையும் அது தொடர்பான ஆவணங்களையும் பார்வையிடுவதற்கு மக்கள் வங்கியின் பொதுமுகாமையாளருக்கு யாழ். நீதியாளர் ஆர்.விக்னராஜா கட்டளை ஒன்றைப் பிறப்பித்துள்ளார்.

இதேவேளை, மேற்படி வழக்குத் தொடர்பான குற்றப்பத்திரத்தை சிங்கள மொழியில் தாக்கல் செய்திருந்ததைக் கண்டித்துள்ள நீதியாளர் யாழ். குடாநாட்டில் தமிழ் மொழிமூலம் மாத்திரமே நீதிமன்ற நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும் என்று கூறியதுடன் அடுத்து வரும் நடவடிக் கைகளில் தமிழ் மொழி மூலமான நடவடிக்கைகளே மேற்கொள்ள வேண்டும் என்றும் கூறி அடுத்த மாதம் 06ம் திகதிக்கு விசாரணைகளைப் பிற்போட்டார். (27)

### கோள்கை அறிக்கை சமர்ப்பிக்கப்படும்

(கொழும்பு)

விவசாயத்துறையின் மேம்பாட்டிற்காக கொள்கை அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது. இத துறையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதே இதன் பிரதான நோக்கமாகும் என்று விவசாயக் கால்நடை அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் தனசேன கெட்டி ஆராட்சி கூறியுள்ளார்.

விவசாய உற்பத்தி தொடர்பான ஆசியக் குழுக்கூட்டம் நேற்று கொழும்பில் நடைபெற்ற போது அவர்இவ்வாறு தெரிவித்தார்.

### கேணல் பதுமன்...

விடுதலைப் புலிகளின் முகாம் என்பன குறித்து ஆராயப்பட்டதாக இணையத் தளங்கள் தெரிவிக்கின்றன.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவருடன் திருகோணமலை மாவட்டக் கண்காணிப்புக் குழுத் தலைவர் அப்டெல் பேர்கன்அவரதுஉதவியாளர் கூர்ஸ்பூர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விடுதலைப் புலிகளின் தரப்பில் கேணல் பதுமனுடன் திருகோணமலை மாவட்டஅரசியல்துறைப் பொறுப்பாளர் திலக், ராஜேஸ் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

### தெல்.யூனியன்...

பாடசாலை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும்அந்தப்பாடசாலையில் கல்விசார் நடவடிக்கைகளில் ஈடுபட பாடசாலை நேரங்களில் மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பாடசாலையில் மேலதிக நேரத்தில் எந்த ஒரு ஆள் நடமாட்டத்திற்கும் படையினர் அனுமதிக்கவில்லை.

பாடசாலை நேரத்தில் பழைய மாணவர்கள், நிற ஆடைகளுடன் செல்லும் விளையாட்டு வீரர்கள் போன்றோரையும் இராணுவத்தினர் தடை செய்துள்ளார்கள். அத்துடன் பாடசாலை மாணவர்களுடன் விரோதப் போக்குடன் செயற்படுவதாகவும் அந்தப் பாடசாலை மாணவர்கள் தெரிவித்துள்ளார்கள். (33)

### பணிப்பாளர்...

துக்கும் சிறிலங்கா சனாதிபதிக்கும் இடையிலான முரண்பாடுகள் தீவிரமடையும் நிலை தோன்றியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### யாழ். மாவட்ட...

கஷ்டப்படுகின்றார்கள் என்றும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய பெரும்பாலான இடங்களில் இராணுவத்தினர் தற்பொழுதும் இருப்பதால் அபிவிருத்தி நடவடிக்கைகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், இவற்றை நீக்கினாலேயே அபிவிருத்திப் பணிகளை திறம்படச் செயற்படுத்த முடியும் என்றும், யாழ். அரச அதிபர் பத்மநாதன் தெரிவித்தார். அத்துடன் மீளக்குடியமர முடியாத யாழ். மக்களின் நிலை தொடர்பாகவும் உதாரணங்களுடன் விளக்கமளித்தார்.

இதன்போது யாழ். மாவட்டத்தில் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வுப் பணிகளை அமெரிக்க அரச சார்பில் யூ. என். ஏ. நிறுவனமே மேற்கொள்ளும் என தென்கிழக்காசிய நாடுகளுக்கான உதவிச் செயலாளர் தெரிவித்தார்.

இவருடன் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுரகத்தின் அரசியல் செயலாளர் கிறீஸ் லோயல் மற்றும் பொதுசனத் தொடர்பு அதிகாரி திருமதி. பத்மினி ராசதுரை ஆகியோர் வருகைதந்திருந்தனர்.

இதனையடுத்து இந்த அதிகாரிகள் மேற்படி விடயம் தொடர்பாக விளக்கமாகவும், புள்ளி விபரங்களுடனும் தரவுகளைச் சேகரித்துக் கொண்டனர். மல்லாகம் பகுதியில் அமைந்துள்ள இடம்பெயர்ந்தோர் முகாமையும் நேரடியாகச் சென்று பார்வையிட்டனர். இதன்போது அப் பகுதி மக்கள் தமக்குள்ள அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பாகவும், தமது வீடுகள் இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்தினுள் இருப்பதையும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை, நேற்று மாலை இவ்வதிகாரிகள் யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான சிவாஜிலிங்கத்துடன் சந்திப்பொன்றையும் நடத்தினர். இச்சந்திப்பில் தற்போது யாழ்ப்பாண மக்களின் நிலை தொடர்பாகவும், மக்களின் சமாதான நிலை தொடர்பாகவும் இடைக்கால நிர்வாகம் வழங்கப்படுவதிலுள்ள இடர்ப்பாடுகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது. (33)

### அபிவிருத்திச்...

கூரை கிடுகுகள் காற்றிற்கு பிடுங்கிச் செல்லப்பட்டுள்ளன. மாணவர்கள் அமர்ந்து கல்வி கற்பதற்குப் போதிய தளபாடங்கள் இல்லை. சுவர்கள் இடிந்த நிலையில் உள்ள மண்டபத்திலேயே மாணவர்கள் கல்வி கற்கின்றனர். பாடசாலையில் மலசல கூடங்கள் அமைக்கப்படவில்லை. இது போன்ற பல்வேறுபட்ட குறைபாடுகளுடனேயே இப் பாடசாலை இயங்கிவருகிறது.

இந்த நிலையில் பாடசாலையின் வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு ஆறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்றுக்காலைமுதல் நீராகாரம் இன்றிய அகிம்சைப் போராட்டத்தை இவர் ஆரம்பித்துள்ளார்.

அவரது கோரிக்கைகளாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள பாடசாலையின் கூரைக்கு கூரைத்தகடு போடுதல் வேண்டும். பாடசாலைக்கு சீமெந்து தரை அமைக்கவேண்டும். சுவர்கள் சீமெந்தால் அமைக்க வேண்டும். பாடசாலை வளாகம் சூழ உள்ள பகுதிக்கு முட்கம்பி அடிக்க வேண்டும். விளையாட்டு மைதானம் அமைத்துத்தரப்படவேண்டும். அதற்கான பணம் விரைவாக ஒதுக்கப்படவேண்டும்.

பாடசாலை மாணவர்கள் பயணிப்பதற்கான வள்ளுவர் பண்ணைக்குச் செல்லும் பாலம் சேதமடைந்துள்ளது அதனைத் திருத்தித் தர வேண்டும். போன்ற ஆறு கோரிக்கைகளையும் முன்வைத்தே இவ் உண்ணாவிரதப்போராட்டம் நடத்தப்படுகிறது. பல தடவைகள் பாடசாலையின் நிலை தொடர்பாக சம்பந்தப்பட்டஅதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியும் அதனை நிவர்த்தி செய்ய எவரும் முன்வராமையாலேயே தமது கிராமத்து பிள்ளைகளின் எதிர்காலத்தை கருத்திற் கொண்டு உண்ணாவிரதம் இருக்கமுன்வந்துள்ளதாகவும் இக் கோரிக்கைகள் நிவர்த்திசெய்யப்பட்டால் மாத்திரமே தனது உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட உள்ளதாகவும் தனது போராட்டத்திற்கு மாணவர்கள், பெற்றோர்கள், இப்பகுதி மக்கள் என பெரும் ஆதரவு கிடைப்பதாகவும் தனது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் பட்சத்தில் இப்போராட்டம் கைவிடப்படும் எனவும் உண்ணாவிரதி தெரிவித்துள்ளார்.

### திருமலை...

போர் விபரம் என்பனவற்றை பதிவு செய்ததுடன் இத்தேடுதலின்போது ஐந்து பேர் விசாரணைக்காகப் பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டனர். இவர்கள் மீது தொடர்ந்து விசாரணை நடைபெற்றுவருவதாகப் பொலிசார் கூறுகின்றனர்.

### வதிரியில்...

ஈடுபட்டனர். உரிய ஆவணங்கள் இல்லாது வாகனங்களில் பயணம் செய்தோரை நீதிமன்றத்திற்கு வருமாறு கட்டளையிட்டனர். (27)

### மகனைக்...

திகை அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் நேற்று அதிகாலை வைத்தியசாலை விடுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் சாவகச்சேரி நீதவானான பிரேம்சங்கர் முன்நிலையில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில வைக்கப்பட்டுள்ளார். (27)


## பத்திரிகை விளம்பரம்

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சிக்காக தகவல் தொழிநுட்பப்பூங்கா கனகபுரம் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடம் திருத்துவதற்கான கேள்விப் பத்திரங்கள் 14.07.2003 வரை என்னால் ஏற்கப்படும்.

தி.இராசநாயகம்,
மாவட்ட செயலரும் அரசாங்க அதிபரும்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி-8409)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜூலை மாதம் 08ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.